பாவலர்

தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்களின் அருமைப் புதல்வன்
அமரர் தெ.து.ஜயரத்தினம் நினைவுதினவுரை
29-10-2001

# பாவலர் துரையப்பாபிள்ளையும் யாழ்ப்பாண வரலாற்று நோக்கும்

## -ஒரு மீள்பார்வை

**பேராசிரியர். சி.க.சிற்றம்பலம், எம்.ஏ., பிஎச்.டி.**
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

மகாஜனக்கல்லூரி,
தெல்லிப்பழை.

# பாவலர் துரையப்பாபிள்ளையும் யாழ்ப்பாண வரலாற்று நோக்கும் - ஒரு மீள்பார்வை

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்.
எம்.ஏ.பி.எச்.டி,
தலைவர்/வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் தலைசிறந்த சிந்தனையாளர். பல்துறை அறிஞர். தமிழ்த் தேசியம் பற்றி ஆழமாகச் சிந்தித்தவர். கிறிஸ்தவராக மாறினாலுங்கூட நாவலர் பெருமானின் சிந்தனையாற் கவரப்பட்டுத் தலைசிறந்த இந்துவாகி மகாஜனக் கல்லூரியை நமது சிறார்களுக்காக நிறுவியவர். இக்கல்லூரி சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் நம்மவருக்காக நிறுவப்பட்ட இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றுக்கெல்லாம் முன்னோடி. இத்தகைய பெருந்தகையின் மகனாகிய திரு.ஜெயரத்தினம் அவர்கள் இக்கல்லூரியின் அதிபராக இருந்து கால்நூற்றாண்டாகச் சிறப்பாகக் கடமையாற்றியதை நினைவு கூரும் இன்றைய வைபவத்தில் பாவலரின் நினைவாக இந்நினைவுப் பேருரையை ஆற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பாவலர் அவர்கள் யாழ்ப்பாண மக்கள் பற்றி, அவர்களின் பழைமை, எதிர்காலம் பற்றி ஆழமாகச் சிந்தித்தவர் என்பதற்கு ஆதாரமாக விளங்குவதுதான் இவரால் 1907ஆம் ஆண்டில் "சிலோன் நாஷனல் ரிவியூ" "Ceylon National Review" என்ற ஆங்கிலச் சஞ்சிகையில் இவரால் எழுதப்பட்ட "Jaffna Past and Present" "யாழ்ப்பாணம் அன்றும் இன்றும்" என்ற கட்டுரையாகும்.[1] இக்கட்டுரையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இது 1960களில் வெளியான மகாஜனக் கல்லூரிப் பொன்விழா மலரில் மறுபிரசுரமானது. இதே கட்டுரையைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் 1983இல் பாவலர் துரையப்பாபிள்ளையின் ஆறாவது நினைவுப்பேருரையாக மீள்பார்வை மேற்கெண்டிருந்தார்.[2]

இக்கட்டுரையில் இரத்தினச் சுருக்கமாகப் பாவலர் அவர்கள் அன்றைய யாழ்ப்பாணம் பற்றி ஒரு விமர்சன விளக்கத்தை மேலோட்டமாக மேற்கொண்டிருந்தார். அன்று அவர் சுட்டிக்காட்டிய இப்பகுதியின் வரலாறு மட்டுமின்றி மக்களின் திடகாத்திரமான வாழ்விற்குரிய வழிவகைகள், கல்வி முறை, பெண்கல்வி, தமிழ் அறிஞர்களின் போக்கு, விவசாயம், கைத்தொழிலில் கூட்டுமுயற்சி போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றி இன்னும் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியவை. எனினும், விரிவஞ்சி யாழ்ப்பாண வரலாறு பற்றி அவரின் கருத்துக்கள் பற்றியே இப்போது கருத்துரை வழங்க முயல்வேன். இப்பகுதியின் ஆதிகாலந்தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையிலான வரலாற்றை அவர் தொட்டுக்

காட்டினாலுங்கூட இன்றைய உரையில் ஆதிகாலம் பற்றியே அதுவும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னருள்ள காலப்பகுதி பற்றியே கருத்துரை வழங்குவது அவசியமாகின்றது. எனினும் நமது உரைக்கு முன்னர் அவர் கூறியவற்றை மேற்கோளாகக் கொண்டு நமது உரையை ஆரம்பிப்பது பொருத்தமாகின்றது. அன்று அவர் கூறியது இதுதான்.

> " ஒவ்வொரு நாடும் அது எவ்வளவு முக்கியத்துவமற்றதாக இருந்தாலும் அதற்கென ஒரு நிகழ்காலத்தையும் கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் அது கொண்டுள்ளது. ஒரு நாட்டின் கடந்த காலமாவது அவ்விறந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் பதிவாகவே உள்ளது. பெரும்பாலான நாகரிகமுள்ள நாடுகளில் கடந்த கால வரலாறு அந்நாட்டு மக்களின் ஆழ்ந்த உந்துசக்தியாய் விளங்குகிறது. அது தமக்குக் கையளிக்கப்பட்ட பெறுமதிமிக்க முதிசமாகவே அவர்கள் கருதுகின்றனர் .......... தனிமனிதர்களைப் போன்றுதான் நாடுகளும். ஒவ்வொரு தனிநபரும் எவ்வாறு தமது மூதாதையினரின் சாதனையினையிட்டுப் பெருமைப்படுகின்றானோ அதே போன்றுதான் ஒவ்வொரு நாடுமாகும்............
>
> யாழ்ப்பாணத்தின் பண்டைய வரலாறு ஏனைய பல நாடுகளின் பண்டைய வரலாற்றைப் போன்று தெளிவு சிறிதுமற்றும் நிச்சயமற்றும் இருள் சூழ்ந்ததாயும் காணப்படுகிறது.குறிப்பாக இப்போது நமக்குக் கிடைக்கும் நூல்களிற் பதியப்பட்ட வரலாறானது குறிப்பிடப்படும் நிகழ்வுகள் நடைபெற்ற பின்னர் எழுதப்பட்டவையாகவே உள்ளது. எவ்வாறாயினும், எமக்குள்ள பொதுவான அறிவு, வகைப்படுத்தி ஆராயும் திறன் ஆகியன சமகால வரலாற்றுச் சம்பவங்கள் பற்றிய சான்றுகளை ஈழத்து வரலாற்று நூல்களிலும் பிறவற்றிலும் நாம் பயில்வதானது, இத்தகைய வரலாற்றில் எதை ஏற்பது எதைப் புறக்கணிப்பது என்பதை அறிந்துகொள்ள உதவும்.......
>
> யாழ்ப்பாணத்தவராகிய நாம் வேறுபட்ட சமயங்களின் வழி ஒழுகுபவர்களாயிருக்கலாம். எனினும், இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை, அரசியல் அபிலாஷைகள், சமுதாய முன்னேற்றம் என்பவற்றில் நாம் பிரிக்கமுடியாதவாறு இணைந்துள்ளோம். நாமெல்லோரும் தமிழ்த் தேசிய இனத்தின் அலகுகளாகும். ஒரே நாட்டில் இணைந்து வாழும் நாம் வாழ்க்கைப் பெரும்போரில் எங்களுடைய பொது நன்மைக்காக இணைந்து போராட வேண்டும்.

பரஸ்பர அன்பு, அனுதாபம் ஆகியவற்றின் மூலம் நாம் ஒன்றிணைய வேண்டும். அப்பொழுதுதான் எமது குரல் பலமாக ஒலித்து எமது தாழ்வு நிலையிலிருந்து மீட்சி பெற்றுப் புத்துயிர் பெற வழி பிறக்கும். எமது தேசிய இனத்தின் தனித் தன்மையை வளர்த்துக் கொள்வதால் மட்டுமே அழகியதும், புகழ்பூத்ததுமாகிய இத் தீவில் வாழும் நற்பேறுபெற்ற சமூகங்களுக்குள் ஒரு கௌரவமான இடத்தை நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணத்தின் ஆதிவரலாற்றில் பாவலர் அவர்கள் வழக்கம் போலே பல ஐதீகங்களை இணைத்துள்ளார். கீரிமலை பற்றிய ஐதீகங்கள், விஜயன் கதிரைமலையில் கால்கொள்ளல், வெடியரசன் போன்ற முக்குவச்சிற்றரசர்கள் போன்றோர் பற்றியவை இவரால் குறிப்பிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் என்ற பெயர் வருவதற்கான யாழ்ப்பாடியின் கதை, இப்பகுதியரசின் தோற்றத்தைக் கூறும் மாருதப் புரவீகவல்லி - உக்கிரசிங்கன் கதை, தமிழகத்திலிருந்து இங்கு வந்து குடியேறிய குடும்பங்கள்பற்றிய செய்தி , யாழ்ப்பாண அரசின் தோற்றம் ஆகியனவும் இவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறுதியாக அவர் கூறியது இதுதான்.

> " பழமை பற்றிய நமது பெருமிதம் பொதுவாகத் தென்னிந்தியாவிலிருந்து ஈழத்திற் குடியேறிய சில குடும்பங்களின் தூய்மை , பெருமை ஆகியன பற்றி வீம்பு பேசுவதிலேதான் உள்ளது என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களின் வீரத்திலோ அல்லது அவர்கள் ஆற்றிய நற்கருமங்களிலோ அல்லது அவர்களின் நிர்வாகச் சிறப்புக்களிலோ நாம் போதியளவு பெருமை கொள்வதில்லை. நமது முன்னோரின் துணிவு, பழைய காலத்தில் வாழ்ந்த புகழ்பூத்த யாழின் மைந்தர்களின் சிறப்பான வாழ்வு ஆகியன நமக்கு உந்துசக்தியாக விளங்குவதில்லை. மாறாகச் சாதி, குடும்பம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட நம் முன்னோர் பற்றிச் சொல்வளத்துடன் பேசிக்கொள்கிறோம்.இதுஏற்புடையதல்ல."

பாவலர் குறிப்பிட்ட வண்ணம் யாழ்ப்பாணத்தின் ஆதிவரலாறுபற்றிக் கூறும் நூல்களான கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை காலத்தால் கி.பி.13 ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியவை. மட்டுமன்றி இவற்றுள், குறிப்பாக யாழ்ப்பாண வைபவமாலை முற்பட்ட கால நிகழ்ச்சிகளை ஐதீகங்களுடன் கலந்து பிற்பட்ட காலத்தில் எதுவித தொடர்ச்சியுமின்றி அங்கும் இங்கும் தொட்டுக் காட்டியுள்ளது.

வரலாற்றைக் கால அடிப்படையில் கோவைப்படுத்தும் மரபு தமிழகத்திலுள்ள இந்துக்களிடமோ அன்றி ஈழத்திலுள்ள இந்துக்களிடமோ

காணப்படவில்லை. மாறாக இந்து நாடாக விளங்கிய ஈழத்தில்[3] கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (கி.மு.250) அநுராதபுரத்தில் அரசாட்சி செய்த தேவநம்பியதீசன் காலத்தில் பௌத்தம் இங்கு அறிமுகமானது. பௌத்த மதத்துடன் சம்பந்தப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்தும் மரபு உதயமானது. இதனால் பௌத்த மதத்தை ஆதரித்து அதற்கு அனுசரணையாக இருந்த அரசு, மக்கள் ஆகியவற்றின் வரலாறே இவற்றுள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே தான் ஈழத்தின் ஆதிக் குடியேற்றம் பற்றிய வரலாறாகும். "ஆரியர்" என்ற பதம் மகா வம்சத்தில் காணப்படாவிட்டாலுங்கூட ஈழத்தின் ஆதிக் குடிகள் வடஇந்தியாவிலிருந்தே வந்தவர்கள் என்ற கருத்து ஐதீகங்களின் மூலம் இதில் இழைக்கப்பட்டது. பின்வந்த வரலாற்றாசிரியர்களும் இதனை "ஆரியர்" குடியேற்றமென அழைத்து இன்று பாடசாலைகளில் வழக்கிலிருக்கும் பாடநூல்களிலும் இக் கட்டுக்கதையே முக்கியம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

தமிழர்களிடம், வரலாற்றைக் கோவைப்படுத்தும் மரபு காணப்படாததால் மகாவம்சம் போன்ற பாளி நூல்கள் இவர்களை "விதேசிகள்", "ஆக்கிரமிப்பாளர்கள்", "தவறான சமயநம்பிக்கைகளைப் பேணுபவர்கள்" என்ற பதங்களால் அழைத்ததால் சிங்கள மக்களுக்குப்பின் படையெடுப்பாளர்களாகவும், வணிகர்களாகவும் இந் நாட்டுக்கு வந்தவர்களே இவர்கள் என்ற கருத்து ஈழத்து வரலாற்று நூல்களில் நன்கு வேரூன்றியது. அத்துடன் அடிக்கடி தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படையெடுப்புகள், மகாவம்சம் போன்ற நூல்கள் எழுதப்பட்ட காலமாகிய கி.பி.ஆறாம் நூற்றாண்டில் ஈழத்தில் வாரிசுரிமைப்போரில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவர்களாகத் தமிழ் இராணுவத்தினர் விளங்கியமை, தமிழகத்தில் பல்லவ, பாண்டிய வம்சங்களின் எழுச்சியும் ஈழத்து அரசியலில் அவற்றின் தாக்கமும், இந் நாடு புத்தரின் கால்பதிந்த நாடு என்றும், பௌத்த தர்மம் வளர்வதற்குரிய நாடே இஃதாகும் என்ற ஐதீகமும் வளர்க்கப்பட தர்மதீபமாகிய இது இந்நாட்டின் ஆதிக்குடிகளாகிய சிங்கள பௌத்தருக்குரிய நாடே என்ற கோட்பாடும் வலுப்பெற்று வளரலாயிற்று. இதனால் பௌத்தத்துடன் தொடர்புடைய வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட இந்துப்பாரம்பரியம் நன்குவேரூன்றிய யாழ்ப்பாண வரலாறு இவற்றில் முக்கியம் பெறாதது வியப்பில்லை. ஈழத்து வரலாற்றாசிரியர்களும் இதேயடிப்படையில்தான் வரலாற்றை யாத்தனர்.

யாழ்ப்பாண வரலாற்றுக்குக் காத்திரமான பங்கை நல்கிய முதலியார் இராசநாயகம்[4] அவர்கள் இப்பகுதி நாட்டின் ஏனைய பகுதிகள் போன்று நாகரிக வளர்ச்சி பெற்றிருந்ததோடு இங்கு வாழ்ந்த நாகர்களின் நாகரிக வளர்ச்சி கிறிஸ்துவுக்கு முன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக கி.மு.15 ஆம் நூற்றாண்டிலே காணப்பட்டது எனக் கண்டு இவர்கள் தமிழரே எனக் கூறினார். சுவாமி ஞானப்பிரகாசரோ[5] எனில் ஒருபடி மேலே சென்று சிங்கள - தமிழ்

மொழிகளுக்கிடையே நிலவும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு ஈழத்தின் தென்பகுதியில் வாழ்ந்தவர்கள், அதாவது தற்காலச் சிங்கள மக்களின் மூதாதையினர் பழந்தமிழரே என்றும் பௌத்த மதத்தின் வருகையோடு அதன் மொழியாகிய பாளி பிராகிருதத்தின் செல்வாக்கால் சிங்களவர்களாக இவர்கள் மாறினார்கள் என்ற கருத்தை முன்வைத்தார்.

எனினும் 1965ஆம் ஆண்டின் பின்னர் விஜயன் கதையை மையமாகக் கொண்ட ஆதிக்குடியேற்றம் பற்றிய சிந்தனை ஈடாட்டம் கண்டது. புகழ்பூத்த வரலாற்றாசிரியரான ஜி.சி.மெண்டிஸ் இக்கதை ஒரு கட்டுக்கதை மட்டுமன்றி ஈழத்தில் சிங்கள மக்களின் குடியேற்றம் பற்றிய சான்றாக இதனைக் கொள்ளமுடியாது என்று கூறியதோடு இப்பாளி நூல்களாகிய தீபவம்சம், மகாவம்சம் ஆகியன எழுதப்பட்ட காலத்தில் கி.பி.4ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இந்நாட்டிற்கு வழங்கப்பட்ட சீகள அல்லது சிம்கள என்ற பதத்திற்குக் கொடுக்கப்பட்ட விளக்கமே இவை எனவும் கூறியுள்ளார்.[6] இக்கட்டுக்கதை மட்டுமன்றிப் பௌத்தம் இங்கு அறிமுகமாக முன்னர் உள்ள வரலாறு பற்றிப் பாளிநூல்கள் கூறும் வரலாறும் சான்றாதாரங்களைக் கொண்டு எழுதப்படவில்லை என்பதை எஸ்.பி.எவ்.செனீவரத்தினா போன்ற மானிடவியலாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.[7] எனினும் 1960களின் பிற்பகுதியில் நிலைமை மாறியது. இதுவரை வெறும் இலக்கியச் சான்றுகளையே மையமாகக் கொண்டு ஆராயப்பட்ட ஈழத்தின் ஆதிக்குடியேற்றம் பற்றிய வரலாற்றில் தொல்லியல் சான்றுகளை - அகழ்வாய்வின் மூலம் பெறப்பட்ட சான்றுகள் முன்னிலைப்படுத்தப்பட்டன. 1969 இல் ஈழத்தின் பழைய தலைநகர்களில் ஒன்றான அநுராதபுரத்திலும்,[8] 1970 இல் வட பகுதியிலுள்ள கந்தரோடையிலும்,[9] வட மேற்குப் பகுதியிலுள்ள பொம்பரிப்பிலும்,[10] அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆதிக்குடியேற்ற மையங்களும், ஈமச் சின்னங்களும் இனங் காணப்பட்டன. இக்குடியேற்ற மையங்களில் அநுராதபுரம், கந்தரோடை, மாந்தை, தென்கிழக்கேயுள்ள திஸ்ஸ மகாராம (அக்குறு - கொட ) பிரதானமானவை. அநுராதபுரத்திலும் திஸ்ஸமகாராமவிலும[11] இன்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் ஆய்வுகள் தொடர்கின்றன.

இப்பின்னணியில்தான் 1980இல் நாம் பெற்ற கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வு பூரணம் பெற்றது.[12] சுவாமி ஞானப்பிரகாசர் தமிழரைப் போலச் சிங்களவரும் பழந்தமிழரே என்றும் அவர்கள் பேசிய "எலு" மொழி தமிழ் வழிவந்த மொழியே என்றும் கூறிய கருத்துக்களுக்கு முதல் முதலாகத் தொல்லியலில் - அதுவும் அகழ்வாராய்ச்சிச் சான்றுகளின் அடிப்படையில் உரங்கொடுக்கப்பட்டது. இதனால் நமக்கு முன்னர் யாழ்ப்பாண வரலாறு பற்றி ஆராய்ந்த பேராசிரியர்களான

கா.இந்திரபாலா, சி.பத்மநாதன போன்றோருக்கோ அன்றிப் பிற சிங்கள வரலாற்றாசிரியர்களுக்கோ கிடைக்காத அகழ்வாராய்ச்சி மூலம் கிடைத்த யாழ்ப்பாணச் சான்றுகளோடு மட்டுமன்றித் தமிழக - தென்னிந்தியச் சான்றுகளோடும் இணைத்துப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. இத்தகைய அகழ்வியல் மூலம் பெறப்பட்ட சான்றுகளை உடைய கலாசாரத்தைத் தொல்லியலாளர் பெருங்கற்காலக் கலாசாரம் என அழைப்பர். இதனை வரலாற்றுதய காலம் எனவும் அழைக்கும் மரபுண்டு. காரணம் ஈழத்தின் வரலாறு மலருவதற்குக் கால்கோளாக அமைந்த காலமே இ∴தாகும்.

ஈழத்தின் வரலாற்றுக்காலம் கி.மு.250 இல் தோற்றம் பெறுவதால் (அண்மைக் காலச் சான்றுகள் இதனை கி.மு. 500 எனவும் இட்டுச் செல்கின்றன) இதற்கும் வரலாற்றுக்கு முற்பட்டகாலமாகிய கற்காலம் முடியும் காலமாகிய கி.மு. 1000 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலமே (கி.மு. 1000 - 250) இ∴தாகும். பெரிய கற்களைப்பயன்படுத்தி அக்கால மக்கள் ஈமச்சின்னங்களை அமைத்ததால் இக் கலாசாரம் பெருங்கற்காலக் கலாசாரம் எனவும் அழைக்கப்பட்டது. பொதுவாக இப் பெயரினால் இது அழைக்கப்பட்டாலுங் கூட பெரிய கற்களை உபயோகிக்காமல் குழிகள், தாழிகள் ஆகியவற்றுள் மேற்கொள்ளப்பட்ட அடக்க முறைகளும் இவ்வாறு பெயர் பெற்றன. இதற்குக் காரணம் இவ்வடக்க முறைகளிலும் மக்கள் குடியிருப்புகளிலும் கிடைத்துள்ள நிவேதனப் பொருட்களில் இரும்பாயுதங்கள் பிரதானமாகக் காணப்படுவதால் இதனை இரும்புக்காலம் எனவும் அழைப்பர். அத்துடன் கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்களும் இப்பண்பாட்டிற்குரிய மற்றொரு சிறப்பு அம்சமாகும். இவற்றோடு நீர்ப்பாசனம், மந்தை வளர்ப்பு, நெல் விவசாயம் ஆகியவற்றிலும் இம்மக்கள் பயிற்சி பெற்றிருந்தனர். பொதுவாக இப் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக மக்களின் இருப்பிடங்கள், ஈமச்சின்னங்கள், குளங்கள், வயல்கள் ஆகியன விளங்கின. இத்தகைய பண்பாடுதான் தென்னிந்தியாவில் கி.மு. 1000 ஆண்டளவில் திராவிட மொழிகளைப் பேசும் மாநிலங்களின் நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டது. திராவிடர்களாகிய இவர்களின் இப் பண்பாடுதான் சங்க இலக்கியங்களிலும் பேசப்படுகிறது. இத்தகைய பண்பாடுதான் ஈழத்திலும் கி.மு. 900 ஆம் ஆண்டளவில் பரவியது என்பது நமது முடிபாகும். இக் கருத்தினை உறுதி செய்யத் தொல்லியல் சான்றுகளுடன் மானிடவியல் சான்றுகள், சிங்கள - தமிழ் மொழிகளின் பொதுத் தன்மைகள், தமிழ் - சிங்கள உறவு முறைப் பெயர்கள், பிற சமூகவியல் சமய ஒற்றுமைகள் நம்மால் முன்வைக்கப்பட்டன. பௌத்தத்தின் வருகையோடுதான் பண்டைய தமிழகத்தில் கடல்கோளுக்கு உள்ளாக்கப்பட்ட "ஏழ்" நாட்டின் ஒரு பகுதியே ஈழம் எனவும், இந்த ஏழ் நாட்டில் வழங்கிய மொழிகளுள் ஒன்றாகிய "எலு", அதாவது சிங்கள மொழியின் மூதாதை மொழி என்பதும் வலியுறுத்தப்பட்டது. இதற்குச் சான்றாதாரமாக ஈழத்தின் பல பகுதிகளிலுமுள்ள கிறிஸ்து பிறப்பதற்கு முன் எழுதப்பட்ட பிராமிக் கல் வெட்டுக்களில் காணப்படும் பழந்தமிழ் நெடுங்கணக்கு வடிவங்களான

ல, ள, ழ, ற, ன போன்றன மட்டுமன்றி இவற்றில் இடம் பெற்ற குறுநிலத் தலைவர்களான பருமக (பெருமக்ன்) என்ற விருதினால் அழைக்கப்பட்டோர். தமிழகக்குறுநில மன்னர்களைப் போன்ற ஆய், வேள் ஆகியோர் மட்டுமன்றிப் பரதவர், உதியர், சோழர் (சுட) போன்ற இனக் குழக்களும் இவற்றில் குறிக்கப்பட்டுள்ளதோடு , பழையர், மாறன், மருமகன், கோட்டை, திரு, கடவை, போன்ற பெயர்களும் இடம்பெற்றுள்ளதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின் கிறிஸ்துவுக்கு முன்னருள்ள காலப்பகுதியிலுள்ள சமூக அரச நிறுவனங்களின் வளர்ச்சி தமிழகத்தை ஒத்தே காணப்பட்டது என்பதும் நம்மால் வலியுறுத்தப்பட்டது.

இக்கருத்தையே சமூகவியலாளரான சுசந்தா குணதிலகாவும் ஆமோதித்தார்.[13] இதனையே 1996 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பேராசிரியரான சுதர்சன் செனீவரத்தினாவும் பின்வருமாறு உறுதி செய்தார்[14].

> “வரலாற்றுதயகாலக் குடியிருப்புகள் , ஈமச்சின்னங்கள் காணப்படும் மையங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வானது தென்னிந்திய இரும்புக்கால கலாசாரத்தின் தொழில்நுட்ப கலாசார அம்சங்களின் தென் எல்லையாக ஈழம் விளங்கியதை எடுத்துக் காட்டுகின்றன. இவ்விடங்களில் காணப்படும் கருவிகள், இங்கே நெல்லோடு கூடிய விவசாயம்,மிருகங்களின் பயன்பாடு, குதிரையின் உபயோகம், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரும்பு, செம்பு ஆகியவற்றில் ஆயுதங்களைச் செய்தல் பல்வேறு கல்லின வகைகளில் மணிகளை உற்பத்தி செய்தல் , கிராமங்களை அமைத்தல் கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஆகியவற்றின் உற்பத்தி , இம் மட்பாண்டங்களில் காணப்படும் குறியீடுகள் ஆகியவை தென்னிந்தியாவிலிருந்துதான் ஈழத்திற்கு இவை அறிமுகமானவைஎன்பதை உறுதிசெய்கின்றன. விஞ்ஞானகாலக்கணிப்பீடு இத்தகைய தொழில்நுட்ப கலாசார அம்சங்களின் தாயகம் ஆகியவை ஈழத்தின் ஆதிக்குடியேற்றங்கள் பற்றிப் பாளி நூல்கள் தரும் தகவல்களை உறுதிப்படுத்தவில்லை........ அநுராதபுரம் போன்ற வரலாற்றுதய கால மையப் பீடங்களில் கிடைத்த விலங்கியல், தாவரவியல் சான்றுகள் இம்மக்கள் வேட்டையாடுதல், மந்தை வளர்ப்புடன் நெல் உற்பத்தியிலும் ஈடுபட்டதை எடுத்துக் காட்டுகின்றன. கள ஆய்வுகள் இத்தகைய சிறு குடியேற்றங்கள் கரையோரப் பகுதிகள் நதியோரங்களிலுள்ள வளமான இடங்கள் ஆகியவற்றுள் பரந்திருந்ததை உறுதிசெய்கின்றன. இத்தகைய ஆதி இரும்புக்கால கலாசார அம்சங்கள் வரலாற்றுதய காலம் வரலாற்றுக் காலமாக மலரும் வரை மட்டுமன்றி ஆரம்பகால வரலாற்றுக் காலம் வரை நீடித்தன. வரலாற்றுதய காலக்

குடியேற்ற மையங்கள் அவற்றுடன் இணைந்த ஈமச்சின்னங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிக் காணப்படும் பழைய பிராமிக் கல்வெட்டுக்களைத் தாங்கி நிற்கும் குகைகள் வரலாற்றுதயகால மக்களின் சந்ததியினரே புதிய கலாசாரப் படர்க்கைக் காலம் வரை நீடித்திருந்ததை எடுத்துக் காட்டுகின்றன.''

இதனால் ஈழத்தில் ஆதி நாகரிக கர்த்தாக்களே வரலாற்றுக்கால நாகரிகத்தை வளர்த்தெடுத்தவர்கள் என்பதும், பழந்தமிழராகிய இம்மக்கள் மத்தியில்தான் பௌத்தம் பரவியதென்பதும், பௌத்தத்தோடு அறிமுகமாகிய பாளிப் பிராகிருதத்தின் செல்வாக்கால் பழந்தமிழ் வழிவந்த மொழிகளில் ஒன்றான ''எலு'' பிற்காலச் சிங்களமாக உருமாறியதும் தெளிவாகின்றது. இத்தகைய மொழி உருமாற்றத்திற்கு வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள. பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்ட தானங்களை எடுத்தியம்பும் பிராமிக் கல்வெட்டுகள் இக்கலாசார மையங்களை அண்டிக் காணப்படுவதுடன் , பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய குறியீடுகள் பல இப்பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுவதும் பெருங்கற்கால கலாசார மக்களே பௌத்தத்தை அநுசரித்தது மேலும் உறுதியாகிறது.

வட பகுதியில் 1917 இல் கள ஆய்வை மேற்கொண்ட சேர்.போல்.பீரிஸ் அவர்கள் தமது ஆய்வின்போது இங்கே பலவகையான உலோகத்தினாலான பொருட்கள், வெண்கல மைக்குச்சிகள், நாணயங்கள், உரோம மட்பாண்டங்கள், சிற்பங்கள், பௌத்தமத வழிபாட்டுச் சின்னங்கள் ஆகியவற்றை இனம்கண்டார். கந்தரோடையைச் சிறிய அளவிலான ''அநுராதபுரம்''என அவர் வர்ணித்துப் பின்வருமாறு கருத்தும் தெரிவித்தார்.[15]

''இந்தியாவிலிருந்து முப்பது மைல் தொலைவில் மாத்திரம் உள்ள நாட்டை ஒவ்வொரு நாட் காலையும் மீன் பிடிக்கப் புறப்படும் போது கண்டிருப்பார்கள் என்பது நியாயப்படுத்தக்கூடியதே. இதனால் இந்தியாவில்மக்கள் குடியேறத் தொடங்கியவுடனேயே கடற்பிரயாணம் பற்றி விளங்கிய மக்கள் ஈழத்திலும் குடியேறியிருப்பார்கள் எனலாம். விஜயன் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இத்தகைய நிலை காணப்பட்டது என்பது நிரூபணமாகியுள்ளது''

மேலும் இவர் ஈழத்தின் புகழ்பூத்த ஈஸ்வரங்களான திருக்கேதீஸ்வரம், முன்னீஸ்வரம், தண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், காங்கேசன் துறைக்கு அண்மையிலுள்ள நகுலேஸ்வரம் ஆகியன விஜயன் ஈழத்திற்கு வரமுன்னருள்ள பல நூற்றாண்டுகட்கு

முன்னரே நிலை பெற்றிருந்தன எனவும் குறிப்பிட்டுள்ளார். இதே செய்தியை யாழ்ப்பாண வைபவமாலையும் உறுதி செய்துள்ளது.[16] இறுதியாக ஈழத்தின் தொல்லியல் நடவடிக்கைகளுக்குத் தொல்லியலில் பயிற்சி பெற்ற ஒருவர் பொறுப்பாக இருக்கும் பொழுது தமிழ்ப் பகுதிகளை அவர் புறக்கணிக்க மாட்டார் எனத் தாம் நம்புவதாகவும் கூறி 1919இல் வெளியான டெயிலி நியூஸ் பத்திரிகையில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.[17]

"I hope that the Tamil people will realise that in truth there is buried in their sands the story of much more facinating development than they had hitherto dreamed"

அதாவது இதுவரை கனவிலும் எண்ணிப்பாராத தமது நாகரிகத்தின் கவரத்தக்க வளர்சிக் கட்டம் பற்றிய சான்றுகள் உண்மையாகவே மண்ணுக்குள் புதைந்திருப்பதைத் தமிழ் மக்கள் (ஒரு காலத்தில்) உணர்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

சேர்.போல்பீரிசின் கூற்றுத்தீர்க்கதரிசனமானது என்பதை அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி.விமலா பேக்லே 1967 இல் கந்தரோடையில் மேற்கொண்ட மேலாய்வும்.[18] 1970இல் இவ்விடத்தில் நடாத்திய அகழ்வாய்வும்[19] வடபகுதி வரலாற்றுதயகாலத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளன. கந்தரோடையின் ஆதிக்குடியிருப்பு மையத்தின் விஸ்தீரணம் அநேகமாக 4 கிலோ மீற்றராகும். இது வழுக்கை ஆற்றங்கரையிலுள்ளது. வழுக்கை ஆறே சில காலங்களில் கந்தரோடை கடலோடு கொண்டிருந்த தொடர்பில் முக்கிய பங்காற்றியிருக்கலாம் எனக் கொள்ளப்படுகிறது. கந்தரோடை அகழ்வு பற்றி அறிக்கை வெளிவராத நிலையில் இவ்வாய்வு பற்றி விமலா பேக்லே எழுதிய கட்டுரையை மையமாகக் கொண்டே கருத்துத் தெரிவிப்பது தவிர்க்க முடியாதுள்ளது. கந்தரோடை அகழ்வின்போது இரு ஆய்வுக் குழிகள் தோண்டப் பட்டன. இவற்றின் ஆழம் 4 மீற்றராகும். அத்துடன் இவ்விடத்தில் இரு கலாசாரப் படைகள் இனங்காணப்பட்டன. இவை முறையே வரலாற்றுதயகால, வரலாற்றுக்காலக் கலாசாரப் படைகளாகும். ஈழத்தின் ஏனைய பகுதிகளில் கிடைத்தது போன்று கற்கால மனிதன் இப்பகுதியில் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படவில்லை. மாறாக, இப்பகுதியின் நாகரிக வளர்ச்சி பெருங்கற்காலக் கலாசாரத்துடன் தொடங்கியது என்பதையே ஆரம்பத்திற் கிடைத்த பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய தடங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வகழ்வின்போது பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய இரும்பு, வெண்கலம் ஆகிய மூலப் பொருட்களிலான பல்வேறு வகையான கருவிகள், மணிவகைகள், உரோம நாணயங்கள், உரோம மட்பாண்டங்கள், இலட்சுமி நாணயங்கள், வெண்கலத்திலான சூலம், வேல், நெல்லின் உமிபடிந்த வெண்கல மைக்குச்சி ஆகியன கிடைத்துள்ளன. இங்கு கிடைத்துள்ள மிருக எலும்புகளில் மாட்டின் எலும்பு பிரதானமானது. இவற்றுட் பல கூரிய ஆயுதத்தினால் வெட்டப்பட்டதற்கான சான்றுகளுடன் காணப்படுவதானது மந்தைகளை வளர்த்து விவசாய நடவடிக்கைகளுக்காக இவற்றைப் பயன்படுத்திய இப்பகுதி மக்கள் உணவுக்காகவும் இவற்றைப் பயன்படுத்தியமை தெரிகிறது. மட்பாண்டங்களிற் பெருங்கற்காலக் கலாசாரத்திற்குச் சிறப்பளிக்கும் 'கிராபிடி' எனப்படும் குறியீடுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றுட் கோளை, வட்டில், பானை போன்றவற்றின் வடிவமைப்பு அநுராதபுரம், பொம்பரிப்பு, குருகல்கின்ன, திவுல்வேவ, மக்கே வித்த போன்ற இடங்களிற் கிடைத்த பெருங்கற்கால மட்பாண்டங்களின் அமைப்பை ஒத்துக் காணப்படுகின்றது.[20]

இச்சந்தர்ப்பத்தில் இங்கு கிடைத்த கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் பற்றி விமலா பேக்லே கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. இவை தென்னிந்திய இரும்புக் காலத்தைச் சேர்ந்தவை என்றும் இத்தகைய ஒற்றுமை கந்தரோடை – தென்னக மக்கள் ஆகியோர் ஒரே கலாசாரத்தின் வழிவந்தவர்கள் அல்லது இரு பகுதியினரும் மிக நெருங்கிய முறையில் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை உறுதி செய்கின்றதென்றும் கூறிய இவர் இப்பகுதியில் கி.மு. 4ஆம் நூற்றாண்டில் மக்கள் குடியேற்றம் ஏற்பட்டிருக்கலாம் என ஊகித்தார். ஆனால் பின்னர் கந்தரோடையிற் கிடைத்த தொல்லியல் எச்சங்களை விஞ்ஞான காலக் கணிப்புக்கு உட்படுத்தியபோது அநுராதபுரத்தில் கி.மு. 900ஆம் ஆண்டளவில் குடியேற்றம் ஏற்பட்டதைப் போன்று சமகாலத்தில் கந்தரோடையிலும் மக்கள் குடியேற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்பது உறுதியாகியுள்ளது. இவ்வாறே புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்புத் தாழிக் காட்டில் விமலா பேக்லே மேற்கொண்ட ஆய்வின்போது கிடைத்த தொல்லியற் சின்னங்களைக் கருத்திற்கொண்டு இப்பகுதி மக்கள் மாந்தையூடாகக் கந்தரோடையுடன் தொடர்பு கொண்டிருந்ததை எடுத்துக்காட்டியுள்ளார். இத்தகைய கருத்தினைப் பூநகரிப் பிராந்தியத்திலுள்ள மண்ணித்தலை, பரமன் கிராய் போன்ற பெருங்கற்கால மையங்களிற் கிடைத்த சான்றுகளும் உறுதி செய்துள்ளன[21]. கந்தரோடையில் வாழ்ந்த மக்கள் இறந்தோரை அடக்கஞ் செய்ததற்கான சான்றுகளான ஈமச்சின்னங்கள் இற்றைவரை கண்டுபிடிக்கப்படாவிட்டாலுங்கூட இங்குள்ள பௌத்த ஸ்தூபிகள் இங்குள்ள ஈமக்காட்டிலேதான் அமைந்திருக்கலாம். இத்தகைய வழக்கு பௌத்தம் பரவிய தென்னிந்தியாவிலுள்ள ஆந்திராவிலும் காணப்பட்டது. இதனால் பல்வேறு வடிவிலுள்ள பௌத்த ஸ்தூபிகளிலுள்ள ஈமப்பேழைகள் இறந்தோரைப் பக்குவமாக

அடக்கஞ் செய்து வழிபடுவதில் பரீட்சயமான மக்கள்தான் புதிய மதமாகிய பௌத்தம் அறிமுகமானதும் இறந்த பௌத்த பெரியோரின் சாம்பலைப் பேழைகளில் இட்டு ஸ்தூபிகளான ஈமச்சின்னங்களை அமைத்தனர் எனலாம். இதனால் பௌத்த மதத்தைத் தற்போதைய சிங்கள இனத்திற்கு மட்டும் உரிய மதமாக இனம் காணுவது தவறாகும். இச்சின்னங்கள் மட்டுமன்றி இச்சூழலிலுள்ள வயல்கள், குடியிருப்புக்கள், குளங்கள், பெருங்கற்காலக் கலாசாரச் சூழலை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மிகப்பெரிய குளமாகிய மிருசுவில் குளத்தை அடுத்துப் பெரியகுளமாகக் கந்தரோடைக் குளம் விளங்குவது ஈண்டு அவதானிக்கத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் 1980இல் ஆனைக்கோட்டையிலுள்ள பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய ஈமக்காடு கலாநிதி பொ. இரகுபதியால் இனங்காணப்பட்டு பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை இதில் அகழ்வை மேற்கொண்டது.[22] இது அமைந்துள்ள இடம் ஆனைக்கோட்டை மண்கும்பிகளில் ஒன்றாக இருப்பதோடு இது இன்றைய நாவாந்துறைக்கு அண்மித்தும் தற்போதைய இடுகாடான கரையாம்பிட்டி மயானத்துக்கு அருகிலும் அமைந்துள்ளமை இதற்குள்ள மற்றுமோர் சிறப்பாகும். இங்கு அகழ்வை மேற்கொண்டபோது பெருங்கற்காலத்திற்குரிய சான்றுகள் வெளிவந்தன. இவற்றுள் நீளக்கிடத்தி அடக்கஞ்செய்யப்பட்ட இரு சடலங்களும் கறுப்புநிறக் கல்லினாலான முத்திரை ஒன்றும் முக்கியமானது[23]. இம்மண்மேட்டின் உயரம் 4 அடியாகும். எல்லாமாக நான்கு படைகள் இதில் இனங்காணப்பட்டுள்ளன. மூன்றாவது படையிற்றான் இரு மனித எலும்புக்கூடுகள் பத்து அடி வித்தியாசத்தில் கிடைத்துள்ளன. இவற்றின் காலம் முன் பின்னாக இருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் இப்படையின் சேர்க்கை இரு கூறுகளாக (அ,ஆ) அமைந்துள்ளது. முதலாவது எலும்புக்கூடு 'அ' படையிலும், இரண்டாவது எலும்புக்கூடு 'ஆ' படையிலும் காணப்படுகிறது. இப்படையில் கிடைத்த தொல்லியல் சான்றுகளை நோக்கும்போது வரலாற்றுதய காலமும் வரலாற்றுக்காலமும் சங்கமித்த காலப்பகுதியாக இது விளங்குவது தெரிகிறது. இவ்வகழ்வின்போது இனங் காணப்பட்ட பெருங்கற்கால கலாசாரத்திற்குரிய 'கிராபிடி' எனப்பட்ட குறியீடுகளையுடைய மட்பாண்ட ஓடுகள், உரோம ரவுலற்ரற் மட்பாண்டங்கள், இலட்சுமி , உரோம நாணயங்கள், இரும்புக்கருவிகள், மணிவகைகள், கறுப்பு – சிவப்பு நிற மட்பாண்டங்கள்,சிவப்பு நிற மட்பாண்டங்கள், மிருக எலும்புகள், மீன் எலும்புகள், சிப்பிகள், சுறா எலும்புகள், சங்குகள், ஓடுகள் ஆகியன கி.மு 400 – கி.பி 400 வரையிலாவது இப்பகுதியில் மக்கள் நடமாடியதை உறுதி செய்கின்றன. கடற்கரையை அண்மித்து பெருங்கற்கால ஈமக்காடு காணப்படுவதால் மக்களின் குடியிருப்புகளும் இவற்றுக்குக் கிட்டவேதான் இருந்திருத்தல் வேண்டும். இக்கடற்கரைப் பிரதேசத்தின், துறைமுகமாக நாவாந்துறை அமைந்தது. 'நாவாய்' என்றால் கப்பல் எனப்

பொருள்படும். கப்பல்கள் தங்குமிடமாதலால் இது இவ்வாறு பெயர் பெற்றது. கடற்றொழிலோடு வாணிபமும் முக்கிய தொழிலாகக் காணப்பட்டிருக்கலாம்.

அடுத்தாற்போல் இங்கே கிடைத்த இரு சடலங்களையும் நோக்குவோம். இவை இரண்டும் கிட்டத்தட்ட 5 அடி நீளமானவை. மேற்குக் - கிழக்குத் திசை நோக்கிய வண்ணமே புதைக்கப்பட்டிருந்தன. பூரணமான முறையில் மீட்டெடுக்க முடியாதவாறு முதலாவது சடலத்தின் (அ) அரைக்குக்கீழ் உள்ள எலும்புகள் அழிந்துவிட்டன. அரைக்கு மேலுள்ள பகுதியில் இரு கைகளையும் அரையை நோக்கி மடித்தவாறு இச்சடலம் புதைக்கப்பட்டிருந்தது. இம்மனித எலும்பைச் சுற்றி நிவேதனப் பொருட்களாகப் பல படைக்கப்பட்டிருந்தன. இப்பொருட்கள் ஒரு சமயம் இறுதி நேரத்தில் இறந்த மனிதனுக்குச் செய்யப்பட்ட கிரிகைகளின் எச்சங்களாகவும் விளங்கலாம். இவற்றுள் மீன், சுறா ஆகியவற்றின் எலும்புகள், நண்டு ஓடுகள், சங்குகள், சிற்பிகள், பலவகை மிருக எலும்புகள் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவை பெருமளவுக்கு மட்பாண்டங்களில் வைத்துத்தான் புதைக்கப்பட்டிருந்தன. மட்பாண்டங்களில் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவற்றுட் கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள், சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஆகியனவும் அடங்கும். சில மட்பாண்ட ஓடுகளில் குறியீடுகள்உள. எனினும், இவை எல்லாவற்றையும் விட, இச்சடலத்தின் தலைமாட்டில் கறுப்பு – சிவப்பு நிற மட்பாண்ட வட்டிலில் சுறா மாலையுடன் கண்டெடுக்கப்பட்ட கறுப்புநிறக் கல்லாலான முத்திரையே முக்கியம் பெறுகிறது. இம்முத்திரை இரு வரிவடிவங்களில் இரு வரிகளைக் கொண்டுள்ளது. முதலாவது வரியில் சிந்துவெளி நாகரிக எழுத்துக்களிலும், பெருங்கற்கால மட்பாண்ட ஓடுகளிலும் காணப்படும் குறியீடுகளை ஒத்த சித்திர எழுத்துக்கள் காணப்பட, இரண்டாவது வரியில் பிராமி வரிவடிவம் காணப்படுகிறது. இதிலுள்ள சித்திர எழுத்தானது ஈழத்தின் வரலாற்றுக் காலத்தில் பிராமி வரிவடிவம் அறிமுகப்படுத்தப்பட முன்னர் வரலாற்றுதய காலத்தில் இப்பகுதி மக்கள் சித்திர வரிவடிவத்தை அறிந்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. இரு வரிவடிவங்கள் இம்முத்திரையிற் காணப்பட்டாலும் கோவேந்த/ கோவேதன்/ கோவேத/ கோவேதம் என்ற வாசகமே இரு வரிகளாக இரு வடிவங்களில் எழுதப்பட்டுள்ளது எனலாம்.[24] இவற்றுள் இரண்டாவது சடலம் காலத்தாற் பிந்தியது என்பதை இதன் கால்மாட்டில் கண்டெடுக்கப்பட்ட உரோம ரவுலற்ரற் மட்பாண்டங்கள், இலட்சுமி நாணயம், இரும்பாலான அகல் விளக்கின் எஞ்சிய பாகங்கள் ஆகியன எடுத்துக் காட்டுகின்றன. இச்சடலத்தின் நீளம் 4 அடி 9 அங்குலமாகும். பூரணமான நிலையில் நிவேதனப் பொருட்களுடன் இது வெளிக்கொணரப்பட்டுள்ளது. இவை இரண்டும் மேலதிக ஆய்வுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டிருந்தபோது 1987இல் ஏற்பட்ட இந்திய இராணுவ நடவடிக்கையினால் அழிக்கப்பட்டு அகற்றப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் கிடைத்த மிகப்பழைய எலும்புக் கூடுகளுக்கு நேர்ந்த கதிதான் இ∴தாகும்.

இச்சந்தர்ப்பத்தில் ஆனைக்கோட்டையிற் கிடைத்த முதலாவது சடலத்திற்கும் (அ) மாந்தையில் 1950களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சடலத்திற்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமை அவதானிக்கத்தக்கது.[25] இவை இரண்டும் ஒரே அளவினதாகும் இவை இரண்டும் அரையில் கையைக் கட்டிய நிலையில் புதைக்கப்பட்டிருந்தமை இவற்றுக்கிடையே காணப்படும் மற்றுமோர் ஒற்றுமையாகும். மாந்தையிற் கிடைத்த எலும்புக் கூட்டை ஆராய்ந்த அறிஞர் இவ்வெலும்புக்கூடு தென்னிந்திய மக்கட்கூட்டத்தினரதே என எடுத்துக் காட்டியுள்ளனர். ஆனைக்கோட்டையிற் கிடைத்துள்ள எலும்புக்கூட்டுடன் கிடைத்துள்ள முத்திரையிற் பழந்தமிழ் வாசகம் காணப்படுவதால் இவ்வெலும்புக்கூட்டையும் பழந்தமிழரதே எனக் கூறலாம். ஆனைக்கோட்டையில் நாம் மேலே எடுத்துக் கூறியவாறு குழிகளில் இறந்தோரை அடக்கஞ் செய்யும் மரபு காணப்பட்டதோடு தாழிகளிலும் அடக்கஞ் செய்யும் மரபு காணப்பட்டதை இங்கு கண்டெடுக்கப்பட்ட தாழியின் உடைந்த பாகங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனைக்கோட்டையிற் கிடைத்த இரு சடலங்களைப் போலவே காரைநகரிலுள்ள சத்திராந்தையிலும் இரு சடலங்கள் கிடைத்துள்ளன.[26] இவற்றுடன் இவற்றுக்கு அளிக்கப்பட்ட நிவேதனப் பொருட்களாக மட்பாண்டங்களிலான கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள், காணப்படுவதானது ஆனைக்கோட்டையில் நிலவிய கலாசாரத்தை ஒத்த கலாசாரமே இங்கு நிலவியதை உறுதி செய்கிறது. இவ்வாறே வேலணைப் பகுதியிலுள்ள கும்புறுப்பிட்டி, சாட்டி ஆகிய இடங்களிலும் பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய தடயங்கள் கிடைத்துள்ளன.

பண்டைய யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடியேற்ற மையங்கள் பற்றிக் கலாநிதிப்பட்ட ஆய்வுக்காகச் சமர்ப்பித்த கட்டுரையை கலாநிதி பொ. இரகுபதி நூலாக வெளியிட்டுள்ளார்.[27] இதனால் தொல்லியல் நோக்கில் விரிவான முறையில் இப்பகுதியின் ஆதிக்குடியேற்றங்கள் பற்றிய ஆய்வு முதன்முதலாக முதன்மை பெற்றதை இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது. தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்து மக்களின் குடியேற்றம் பற்றிய சான்றுகள் வெறும் ஐதீகங்களில் தங்கியிருக்கவில்லை. கந்தரோடை அகழ்வுகள் கி.மு. 900 ஆண்டளவில் மக்கள் குடியேற்றம் இங்கு ஏற்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன. ஆனைக்கோட்டை, சத்திராந்தை போன்ற இடங்களிற் கிடைத்த சான்றுகளும் கந்தரோடைக்குப் பின்னர் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இங்கு ஏற்பட்ட மக்கள் குடியேற்றத்திற்கான ஆதாரங்களாக விளங்குகின்றன. எவ்வாறாயினும் கி.மு. 200 ஆண்டளவில் புழக்கத்திற்கு வந்த இலட்சுமி நாணயங்கள், ரவுலற்றற் மட்பாண்டங்கள் ஆனைக்கோட்டையிற் கிடைப்பதால் குறைந்தது இக்காலத்திற்கு முன்னர் மக்கள் இங்கு குடியேறிவிட்டனர் என உறுதியாகக் கூறமுடியும். இவ்வாறே கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே இப்பகுதியில் மக்கள் பரம்பல் காணப்பட்டதைக் கந்தரோடை,

ஆனைக்கோட்டை, சத்திராந்தை, நாகர்கோயில், வல்லிபுரம், தாளையடி, வெற்றிலைக்கேணி, வெடியரசன்கோட்டை, திகழி, வேரப்பிட்டி, வேலணை, சாட்டி, கழை ஓடை, திருவடிநிலை, முள்ளி, அரியாலை, துலுக்கன் கோட்டை ஆகிய இடங்களிற் கிடைத்துள்ள தொல்லியல் எச்சங்கள் உறுதி செய்கின்றன. எனினும் விரிவான அகழ்வாய்வின் மூலம் தான் இவற்றின் பரம்பல், வளர்ச்சி பற்றி அறிய முடியும்.

1990களில் பூநகரிப் பகுதியில் கலாநிதி பரமு புஸ்பரட்ணம்[28] மேற்கொண்ட ஆய்வுகளும், திரு. செ. கிருஷ்ணராசா[29] கந்தரோடையில் மேற்கொண்ட ஆய்வுகளும் தொல்லியல் சான்றுகள் பலவற்றை அளித்துள்ளன. இக்காலப் பகுதியில் நமது பல்கலைக்கழகம் கிடைத்த சான்றுகளை ஒன்று திரட்டி இரு நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றுள் முதலாவது நூல் யாழ்ப்பாணம் தொன்மை வரலாறாகும்.[30] எம்மால் எழுதப்பட்ட இந்நூல் யாழ்ப்பாண மாவட்டத்தின் வரலாற்றை மட்டுமன்றி வடபகுதி வரலாற்றை கி.பி. 13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெறும்வரை எடுத்துரைக்கிறது. மறைந்த முன்னைநாள் துணைவேந்தர்களில் ஒருவரான பேராசிரியர் அ. துரைராசா ஏற்படுத்திய ஆராய்ச்சி நிதியத்திலிருந்து வெளியிடப்பட்ட மேற்படி நூலைப்போன்றே யாழ்ப்பாண இராச்சியம் என்ற மற்றோரு நூலும் எம்மால் பதிப்பிக்கப்பட்டது.[31] இவற்றின் தொடர்ச்சியாகிய 'தற்கால யாழ்ப்பாணம்' என்ற நூலையும் வெளியிடுவதற்கான ஆயத்தங்களும் நடைபெறுகின்றன. ஆதலால் பாவலர் கனவை நனவாக்கும் முயற்சிகளில் எமது பல்கலைக்கழகம் முனைந்து செயற்படுகிறது என்பதை இங்கே சுட்டிக் காட்டுவது எமது கடமையாகிறது.

தமிழகத்தை ஒத்த சங்ககாலப் பண்பாடே இப்பகுதியில் நிலவியதென்பதை மேற்கூறிய தொல்லியல், மானிடவியல் சான்றுகள் மட்டுமன்றி இங்கு மக்கள் மத்தியில் புழக்கத்திலிருக்கும் பழந்தமிழ்ச் சொற்கள் இடப் பெயர்கள் ஆகியன உறுதிப்படுத்துகின்றன. வடமொழிச் செல்வாக்கால் தமிழகத்தில் இவற்றுட் பல மறைந்தாலும் யாழ்ப்பாணத்தில் இவை வழக்கிலிருப்பதைத் தமிழக அறிஞரான திருநாவுக்கரசு பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார்.[32]

> "பொதுவாக யாழ்ப்பாணத்திற் பழைய சங்கத்
> தமிழ்ச் சொற்கள் பல இன்றும் வழக்கில்
> உள்ளன. இது மட்டும் அல்லாமல் டாக்டர்
> கால்டுவெல் கூறுவதைப்போல தமிழகத்தின்
> தெற்கு நோக்கிச் செல்லச் செல்ல சமஸ்கிருத
> மொழியின் கலப்பு குறைந்து காணப்படுவதோடு.
> தூய தமிழ்ச் சொற்கள் வழங்கப்படுவதையும்
> காண்கின்றோம். தமிழகத்தைவிட யாழ்ப்பாணத்தில்

வடமொழிச் சொற்கள் மிகமிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகின்றன. ஐது, அதர் என்னும் பழந்தமிழ்ச் சொற்கள் அங்கு இன்றும் வழக்கில் உள்ளன. 'அ' எனும் சுட்டெழுத்து சேய்மையில் உள்ள பொருளைச் சுட்டப் (அவன், அவள், அது) பயன்படுவதாகும். இதைப் போன்று 'இ' எனும் சுட்டெழுத்து அருகிலுள்ள பொருளைச் சுட்டப் (இவன், இவள், இது) பயன்படுவதாகும். இவ்விரண்டிற்கும் இடையில் உள்ளவற்றைச் சுட்ட உகரத்தைப் (உவன், உவள், உது) பயன்படுத்துவது தொல்காப்பியர் காலத்திய வழக்கமாகும். பிற்காலத்தில் இவ்வழக்கம் தமிழகத்தில் மறைந்துவிட்டது. ஆனால் இன்றும் யாழ்பாணத்தில் அந்தப் பழைய வழக்கம் பேச்சு வழக்கில் இருப்பதைக் காண்கிறோம்.
சிறுபிள்ளைகளை 'மகனே'' என்று விழிப்பது தொல்காப்பியர் காலத்திய மரபாகும். இன்றும் யாழ்பாணத் தமிழர்களின் அன்றாடப் பேச்சு வழக்கில் இவ்வாறு விளிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. பழந்தமிழில் மொழிக்கு முதலில் சொல்லின் தொடக்கத்தில் வராத எழுத்துகள் ட,ண,ர,ல,ழ,ள,ற,ன என்பன ஆகும்.

பிறமொழிச் சொற்கள் இந்த எழுத்துகளில் யாதாகிலும் ஒன்றை முதல் எழுத்தாகக் கொண்டு வழங்குவது உண்டு. இச்சொற்களைத் தமிழில் வழங்கப்பட்ட பிறமொழிச் சொற்களாகப் பயனபடுத்துகிறபோது, பொருத்தமான உயிர் எழுத்தை முதலில் சேர்த்து வழங்க வேண்டும் என்பது இலக்கண நூலாரின் துணிபாகும். ரதம் என்பதை 'இரதம்' எனவும் 'ருசி' என்பதை 'உருசி' எனவும், 'லட்டு' என்பதை இலட்டு எனவும் வழங்குவது வழக்கமாகும். இன்றைக்கும் யாழ்ப்பாணத்தில் கல்வியறிவில்லாப் பாமர மக்களும் உருசி (சுவை), இரத்தம் எனப் பேசுவதைக் கேட்கிறோம். இவற்றை மட்டுமல்லாமல் கழியும், இறைச்சி, ஊண், அங்கா, பீலி, சீலை, பூழை போன்ற பழந்தமிழ்ச் சொற்கள் இன்றும் பேச்சுத் தமிழில் இடம்பெற்றுள்ளன. இவை

யாவற்றையும் கருத்திற் கொண்டு நோக்கும் பொழுது கடைச்சங்க காலத்தில் ஸ்ரீ லங்கா தமிழகத்தின் ஒரு பகுதியாக இல்லையென்றாலும், தமிழ் வழங்கும் நிலமாகத் தமிழ்ப் பண்பாட்டுப் பண்ணையாக இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

பாண்டியர் அமைத்த முச்சங்கங்களில் முதற் சங்கம் தென் மதுரையிலும், இடைச்சங்கம்கபாடபுரத்திலும், கடைச்சங்கம் மதுரையிலும் அமைக்கப்பட்டது வரலாறாகும். எவ்வாறாயினும் ஈழத்து ஜதீகங்களிலும் இப்பெயர்கள் இடம் பெறுவதானது பாண்டிநாட்டுத் தமிழ்ச் சங்கங்களுடன் ஈழம் கொண்டிருந்த தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. மகாவம்சமே விஜயனின் பட்டத்தரசியாகிய பாண்டிய இளவரசி தென்மதுரையிலிருந்து வந்ததை உறுதி செய்கின்றது. இத்தென் மதுரை மட்டுமன்றி கபாடபுரமும் ஈழத்துத் பாளி நூல்களிலும் மிகப்பழைய கல்வெட்டுகளாகிய பிராமிக் கல்வெட்டுகளிலும் இடம் பெற்றுள்ளது. கபாடபுரத்தின் இன்னோர் வடிவந்தான் துவாரகாவாகும். துவாரகா, கபாடபுரம் என்பன வாசற் கதவுகளையுடைய நகரமே எனப் பொருள் தரும். ஈழத்தின் பழைய மன்னர்களில் ஒருவனாகிய பண்டுகாபய மன்னனின் ஐதீகத்திலும் அவன் வாழ்ந்த இடங்களில் ஒன்றாக மகாவம்சம் துவாரமண்டலத்தைக் குறிக்கிறது. இத் துவாரமண்டலந்தான் தோணிகலவென்ற இடத்தில் கிடைத்துள்ள பிராமிக்கல்வெட்டில் தவிறிக்கிய நகர என அழைக்கப்பட்டுள்ளது எனப் பரணவித்தான எடுத்துக்காட்டியுள்ளார்.[33] இக்கல்வெட்டு ஈழத்துப் புகழ்பூத்த தாழிக்காடாகிய பொம்பரிப்பிற் காணப்படுவதும், இத்தாழிக் காட்டிற்கும் தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூரிலுள்ள தாழிக்காட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தமிழக - ஈழக் கலாசாரத்தின் ஒற்றுமைக்கான சான்றாதாரங்களாக விளங்குகின்றன. துவார மண்டலம் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தின் பழைய பெயர்களில் ஒன்றாகிய 'மணற்றியும்' பாண்டி நாட்டிற்கும் ஈழத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குகின்றது. இறையனார் அகப்பொருளுரையில் இடைச்சங்க கால இறுதியில் வாழ்ந்த முடத்திருமாறன் என்ற அரசன் கபாடபுரம் கடற்கோளினால் அழிய தமிழ்ப் புலவர்களுடன் வடக்கே சென்று 'மணலூர்' எனும் சிறு நகரில் தங்கினான் எனவும் பின்னர் தான் கடைச்சங்கத்தின் தலைநகராகிய மதுரையை நிர்மாணித்தான் எனவும் கூறப்படுகிறது. மதுரா மான்மியத்திலும் மணலூர், மணவூர் ஆகிய பதங்கள் காணப்படுகின்றன. மணவூர், மணலை, மணற்றி ஆகியன ஒத்த சொற்களே என வாதிடும் முதலியார் இராசநாயகம்[34] இப்பெயர் தென்னிந்தியக் கடற்கரையின் இருமருங்கிலும் வழக்கிலிருந்த பெயரெனவும் கூறுகிறார். இதுவே யாழ்ப்பாணத்தின் பழைய பெயர் என வாதிடும் இவர் யாழ்ப்பாண அரசை நிறுவிய தமிழ் மன்னர்கள் சூடிய விருதுகளான 'மணவையாரிய வரோதயன்' , 'மணவையர்கோன்' ஆகியனவும்,

யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம் ஆகியவற்றில் யாழ்ப்பாணத்தின் பழைய பெயராக மணற்றி இடம் பெறுவதைக் கொண்டும், இம்மணலூர் கந்தரோடையாக இருக்கலாம் என ஊகித்துள்ளார். இம்மணற்றியின் சிங்கள வடிவந்தான் 'வெலிகம' ஆகும். இதுவே இன்றைய வலிகாமமாகும். சிங்கைநகர் சிங்கை எனவும், தஞ்சாவூர் தரு [illegible] ப்படுவது போன்று மணலூர்தான் மணற்றியாகியது எனக் கூறும் முதலியார் இராசநாயகத்தின் கருத்து ஏற்புடையதாகவுள்ளது. இத்தகைய இடப்பெயர் தமிழகத்திலிருந்து இடைச்சங்க காலத்தில் ஏற்பட்ட குடிப்பெயரின் எச்சமாக விளங்குகின்றது எனலாம். இச்சந்தர்ப்பத்தில் கடைச்சங்ககாலப் புலவர் வரிசையில் ஈழத்துப் பூதந்தேவனார் இடம் பெறுவதும் அவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் காணப்படுவதும் நினைவு கூரற்பாலது.[35] தமிழகப் பாண்டிய - ஈழத் தொடர்பினைப் மேலும் உறுதிப்படுத்துவதாக ஈழத்து நூல்களில் கி.மு. 250 ஆண்டிற்கு முன்னர் அரசாண்ட மன்னர் சிலர் குடியிருந்த பெயர்களான பாண்டுவாசுதேவ, பண்டுகாபய போன்ற பெயர்களும் அமைகின்றன. காரணம் பாளி நூல்களில் பாண்டியர் பண்டு என விளக்கப்படுகின்றனர்.

இவ்வாறே சங்ககாலத் தமிழகத்தை நினைவு கூரும் இடப் பெயர்கள் ஈழத்திலும் காணப்பட்டுள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[36] இதற்குச் சான்றாக ஈழத்திற் காணப்படும் மிகப்பழைய கல்வெட்டுகளான பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் பல இடப்பெயர்களின் பொது, சிறப்பு விகுதிகள் பிற்கால கி.பி. 7,8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் - சிங்களக் கல்வெட்டுகளிலும் தொடர்ந்து காணப்பட்டுள்ளதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இப்பெயர்களுள் அடி, குடி, நாடு, காடு, கோடு, கோட்டை, மடை, பாடி, திட்டி, பிட்டி, புட்டி, ஆவி, வாவி, கரை, கல், காமம், குடா, குழி, வயல், மடு, மலை, தலை, தொடுவாய், வயல், நகர், பட்டினம், பள்ளி, ஊர், கடவை, வில் ஆகியவை முக்கியமானவை. இவற்றுள் பெரும்பாலான இடப்பெயர்களின் பொதுவிகுதி சமகாலச் சங்க இலக்கியத்தில் வரும்தமிழக இடப்பெயர்களின் பொதுவிகுதியை ஒத்துக் காணப்படுவதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஈழத்திற் காணப்படும் மிகப்பழைய கல்வெட்டுகளாகப் பிராமிக்கல்வெட்டுகள் விளங்குகின்றன. இவற்றை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வரிவடிவந்தான் தற்காலச் சிங்கள – தமிழ் நெடுங்கணக்கிற்கு வித்திட்டதாகும். பௌத்த மதம் பற்றிய தானங்களைக் குறிப்பாகப் பௌத்த குருமார் வசிப்பதற்குரிய குகைத்தானங்களை இவை குறிப்பதால் பௌத்த மதம் அறிமுகமானதுடனே தான் இவ்வரிவடிவமும் அறிமுகமானது என்ற கருத்து அறிஞரிடையே காணப்பட்டது மட்டுமன்றிச் சிங்கள மக்கள் இந்நாட்டிற்குக் குடியேறியதற்கான தொல்லியல் சான்றுகளாகவும் இவை விளங்குகின்றன எனவும் கருதப்பட்டு வந்தது. இதனால் எங்கெங்கு இத்தகைய குகைக் கல்வெட்டுகள் காணப்பட்டனவே அங்கெல்லாம் இவை சிங்கள மக்களின் குடியேற்ற எச்சங்களாக விளங்குகின்றன எனவும்

கருதப்பட்டது. எனினும், யாழ்ப்பாணப் பகுதியில் ஏனைய மாவட்டங்களைப் போல் இயற்கையான கருங்கற் குகைகள் காணப்படாததைக் கருத்திற் கொண்டு இங்கு சிங்கள மக்கள் குடியேறவில்லை எனக் கூற முடியாது என இவற்றைப் பதிப்பித்த பேராசிரியர் பரணவித்தான கருதினார்.

ஆனால் இக்கல்வெட்டுகளிலுள்ள வரிவடிவத்தை ஆராய்ந்த அறிஞர் தமிழகம் - ஈழம் ஆகிய பகுதிகளில் பௌத்த மதம் கால் கொள்ள முன்னரே இவ்வரிவடிவம் புழக்கத்தில் அதாவது கி.மு. 500ஆம் ஆண்டளவில் இருந்தது என்றும் இதுவே பழைய திராவிடி வரிவடிவம் எனவும் எடுத்துக்கூறியுள்ளனர்.[37] தமிழ் நாட்டில் வழக்கிலிருந்த வரிவடிவத்தை இவர்கள் தமிழ்-பிராமி என அழைத்தனர். இத்துடன் தொடர்புடைய ஈழத்திலிருந்த பழைய திராவிடி வரிவடிவத்தின் அ, இ, உ, எ, ம, ள, ய, ப, த, ச, க போன்றவை மட்டுமல்ல தமிழுக்கே சிறப்பான எழுத்துக்களாகிய ழ, ൭, ள, ன, ற போன்றனவும் இவற்றிலே காணப்படுவதால் இவ் வரிவடிவத்தில் பரீட்சியமான மக்களே பௌத்தத்துடன் வட இந்தியாவிலிருந்து வந்த வட இந்திய பிராமி வரிவடிவத்தைப் பயின்றனர் எனக் கருதுவதற்கு இக்கல்வெட்டுகளில் சான்றுகள் காணப்படுகின்றன. உதாரணமாக நாடெங்கிலும் உள்ள இவற்றில் தமிழ் வடிவங்களான பெருமகன், ஆய், வேள், உதி, பரதவர், மருமகன் போன்ற பெயர்கள் பரந்து காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் குகைக்கல்வெட்டுகள் காணப்படாவிட்டாலும் மக்கள் மத்தியில் இவ்வரிவடிவம் புழக்கத்தில் இருந்ததை ஆனைக்கோட்டையில் கிடைத்துள்ள முத்திரை மட்டுமன்றிப் பானை ஓடுகளில் தமிழகத்தைப் போல் மக்கள் இவ்வரிவடிவத்தை எழுதியதற்கான எச்சங்கள் ஆனைக்கோட்டை, கந்தரோடை, பூநகரியிலுள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய் ஆகிய இடங்களிற் கிடைத்த மட்பாண்டங்களில் தமிழ் மொழிக்கே சிறப்பான ள, ல, ழ, ன, ற போன்றன காணப்படுகின்றன. பரமன்கிராயில் கிடைத்த மட்பாண்டச்சாசனம் 'லோமா' எனவும், மற்றொரு சாசனம் 'வேளான்' எனவும் மண்ணித்தலையில் கிடைத்த பிற இரு சாசனங்கள் ஈல/ஈலெ எனவும் ஈழ எனவும் வாசிக்கப்பட்டுள்ளன.[38] தமிழின் சிறப்பெழுத்தாகிய 'ழ' கந்தரோடையிலுள்ள மட்பாண்டம் ஒன்றிலும்,[39] வவுனியா மாவட்டத்திலுள்ள பெரிய புளியங்குளத்திலும் காணப்படுகிறது. இவ்வாறே இவ்வடிவம் அநுராதபுரத்திலுள்ள மட்பாண்டத்திலும்[40], தெற்கே உள்ள மங்குள் மகாவிகாரைக் கல்வெட்டிலும் கிழக்கு மாகாணத்திலுள்ள பம்பரகஸ்தலாவைக் கல்வெட்டிலும் காணப்படுகிறது.[41] அண்மையில் திஸ்ஸமகாராமாவில் (அக்குறுகொட) மேற்கொண்ட அகழ்வின் போது பானை ஓடுகளில் தமிழின் சிறப்பெழுத்தாகிய ழ, ன காணப்படுகிறது.[42] இதனால் பழந்தமிழரே நாட்டின் பிற பகுதிகளிலும் பரந்திருந்தது போன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காணப்பட்டனர் எனலாம். சங்ககாலத்தை ஒத்த இனக்குழுக்கள்

ஈழத்திலும் காணப்பட்டதற்கான சான்றுகள் உள. பரதவர், ஆய், வேள் பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம். உதியர், அதியர் என்ற இனக்குழுக்களின் எச்சமாக விளங்குவதுதான் 'உதி' என்ற பெயராகும். திஸ என்பது 'திரையரையும்' சோழ அரசகுமாரன் கிள்ளிவளவனை நாகநாட்டு இளவரசி மணந்ததன் விளைவாக உருவாகிய தொண்டைமான் இளந்திரையன் என்பது 'தொண்டையர்' என்ற இனக்குழுவையும், வல்லிபுரப் பொன்னேட்டில் கூறப்படும் 'இஸிகி' என்பது 'இளையர்' என்ற இனக்குழுவையும், யாழ்ப்பாடி கதையில் வரும் 'பாண்' என்பது 'பாணர்' என்ற இனக்குழுவையும்குறித்தது எனலாம். இதனால் யாழ்ப்பாணத்திலும், ஈழத்தின் பிற பகுதிகளிலும் தமிழகத்தைப் போன்ற இனக்குழுக்கள் - குறுநிலத் தலைவர்களாகவும் எழுச்சி பெற்றதைக் காணமுடிகிறது. யாழ்ப்பாணத்தின் அரச உருவாக்கத்தில் இவர்கள் காத்திரமான பங்கை வகித்திருக்கலாம்.

மகாவம்சம் போன்ற பாளி நூல்கள் ஈழம் முழுவதும் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரே குடைக்குள் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் உள்ள காலப்பகுதியிலும் சரி பிற்காலத்திலும் சரி ஆளப்பட்டது என்ற கருத்தையே முன்வைத்துள்ளன. இக்கருத்துத் தவறானது என்பதைக் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னருள்ள காலப்பகுதியில் நாடெங்கணும் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன. இருநூற்று அறுபதற்கு மேற்பட்ட சிற்றரசுகள் காணப்பட்டதைக் கூறும் இவை இச்சிற்றரசின் தலைவர்களாகக் குறநிலத் தலைவர்களாக விளங்கிய பருமகன், வேள், ஆய் போன்றோரே பௌத்த மதத்தின் செல்வாக்கால் கால்கொண்ட வட இந்திய கலாசாரத்தின் மேன்மையை விளக்கும் ராஜ, கமணி, மகாராஜா போன்ற விருதுகளைப் பெற்றதை எடுத்துக்காட்டுகின்றன. இக்குறுநிலத் தலைவர்களின் ஆட்சியே பின்னர் வலுவுள்ள அரச உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. வடபகுதியிலும் வவுனியா மாவட்டத்திலுள்ள பெரியபுளியங்குளக் கல்வெட்டிலும், பூநகரியில் கிடைத்த மட்பாண்டச் சாசனத்திலும் 'வேள்' பற்றிய குறிப்புக் காணப்படுவதும், ஆனைக்கோட்டை முத்திரையில் 'கோவேந்தன்' என்ற வாசகம் காணப்படுவதும் இத்தகைய போக்கே வடபகுதியிலும் காணப்பட்டது எனலாம். இவ்வாறே நாட்டின் பல பகுதிகளிலுள்ள கல்வெட்டுகளில் 'பரதவர்' சமூகத்தினர் பத, பரத என அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஒரு பிரிவினரான முக்குவத் தலைவர்கள் கூட குடாநாட்டில் குறுநிலத் தலைவர்களாக விளங்கியதை வெடியரசன் போன்ற இச்சமூகத் தலைவர்கள் பற்றிக் கிடைக்கும் ஐதீகங்கள் உறுதி செய்கின்றன.

இத்தகைய போக்கு வடபகுதியிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணப்பட்டாலும் இப்பகுதியின் வரலாறு தனித்துவமான போக்கிலே சென்றது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பாளி நூல்களும் தமிழ் நூல்களும் இப்பகுதியை "நாக தீப","நாக நாடு","மணிபல்லவம்" என அழைக்கின்றன. இந்நாட்டிற்குரிய ஐதீகங்களை நோக்கும் போது நாடாக எழுச்சி பெறுவதற்கான தனித்தன்மையை இப்பகுதி கொண்டிருந்தது புரிகிறது.[43] நாகதீபம் என்ற பதம்

கிபி.4 ஆம் நூற்றாண்டிற்குரிய வல்லிபுரப் பொற்சாசனத்திலும், ஏன் பிற்காலப் பாளி நூல்களில் மட்டுமன்றித் தமிழகச் சோழ, பாண்டிய, விஜயநகரக் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. நாக தீபத்தின் பழைமை புத்தர் இந்நாட்டிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இங்கு ஆட்சி செய்த நாக அரசர்கள் பற்றிய குறிப்பு மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனினும், தேவநம்பிய தீசனின் ஆட்சியில் எவ்வாறு அவனின் ஆணையைச் சிற்றரசர்கள் அங்கீகரித்தனர் என்பதை ஒரு நிகழ்ச்சி மூலம் மகாவம்ச ஆசிரியர் எடுத்துக் காட்ட விரும்புகிறார்.

அதாவது பௌத்த மதத்தின் புனிதச் சின்னமாகிய அரசமரக் கிளையை நாட்டும் வைபவத்தில் கௌரவிக்கப்பட்ட விருந்தினராகத் தென்கிழக்கே கதிர்காமம், சந்தனாகம ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆட்சி செய்த கதிர்காம, சந்தனாகமச் சத்திரியர்கள் விளங்குகின்றனர்.[44] மாறாக யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து எந்தவொரு சிற்றரசர்களும் பங்குபற்றியதற்கான சான்றுகள் மகாவம்சத்தில் இல்லை. கதிர்காம, சந்தனாகமச் சத்திரியர்கள் போன்று யாழ்ப்பாணச் சிற்றரசர்களும் பழைய இந்து மத வழிபாட்டு மரபில் வந்தவர்கள். இது பற்றி விரிவாக எமது ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் ஒன்றில் விளக்கியுள்ளோம். இப்பகுதி மக்களின் பழந்தமிழரின் வழிபாட்டு மரபில் நாக வழிபாடும் முக்கியம் பெற்றிருந்ததால் போலும் இப்பகுதி மக்கள் நாகர்கள் என விளிக்கப்பட்டனர். நாகவழிபாடு மட்டுமன்றிச் சங்க காலத் தமிழகத்தில் வழக்கிலிருந்த மாயோன், சேயோன் வழிபாடுகளும் இங்கே முன்னிலை பெற்றிருந்தன. கந்தரோடையில் கிடைத்துள்ள வேல், இப்பகுதி இலட்சுமி நாணயங்களில் சித்திரிக்கப்படும் முருகனது வேல், வாகனமாகிய மயில் ஆகியன மட்டுமன்றி, இன்றும் சங்ககால வேலனின் வழிபாட்டுமரபின் எச்சமாக விளங்கும் செல்வச்சந்நிதி வழிபாட்டு மரபு ஆகியனவும் இதன் பழைமையைப் பறை சாற்றுகின்றன. சங்ககால மாயோன் வழிபாடு பின்னர் வடமொழிக் கலாசாரத்தின் தாக்கத்தால் விஷ்ணு வழிபாடானதை உறுதிப்படுத்துவனவாய் அமைந்துள்ளனதான் பொன்னாலை, வல்லிபுரம், ஆகிய இடங்களிலுள்ள விஷ்ணு வழிபாட்டுத் தலங்களாகும். முருக வழிபாட்டோடு ஈழத்தில் விஷ்ணு, சிவ, துர்க்கை, இலட்சுமி ஆகிய தெய்வங்களின் வழிபாடு கிறிஸ்துவிற்கு முன்னரே பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வேரூன்றிவிட்டன என்பதை நாடெங்கிலுமுள்ள பிராமிக் கல்வெட்டுகளில் இவ்வழிபாட்டை உறுதிப்படுத்தும் வகையில் பௌத்த மதத்திற்குக் குகைத் தானங்களை வழங்கியோர் சூடியிருந்த பெயர்கள் எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய நாமங்களில் ஒன்றான ''சிவ'' என்ற பெயர் கந்தரோடை மட்பாண்டச் சாசனத்தில் உள்ளதை திரு.செ.கிருஷ்ணராஜா எடுத்துக் காட்டியுள்ளார்.[45] இதனால் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும் திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி, கதிரை ஆண்டார் ஆலயங்கள் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நிலைபெற்றிருந்தமை

உறுதியாகிறது.[46] பௌத்தம் இப்பகுதி மீது கொண்டிருந்த தொடர்பும் மிகக் குறைவே. அரச மரக்கிளை யம்புகோளப் பட்டினத்தில் வந்திறங்கிய போது அநுராதபுர மன்னனாகிய தேவநம்பிய தீசன் அங்கு சென்று அநுராதபுர நகருக்கு ஊர்வலமாக அதனை இட்டு வந்ததையும் குறிப்பிடும் மகாவம்சம் இந்நிகழ்ச்சியின் நினைவாக அரச மரக்கிளைகளில் ஒன்று இங்கே நாட்டப்பட்டதுடன் யம்புகோள விகாரையும் சமுத்திபன்னசாலா என்ற மண்டபமும் கட்டப்பட்டதையும் கூறுகிறது.[47] தேவநம்பிய தீசனின் ஆட்சியின் போது நாட்டின் பல இடங்களிலும் இவ்வரச மரக்கிளைகள் நாட்டப்பட்ட நிகழ்ச்சியானது பிரசார மதமாகிய இது ஏற்கனவே காலூன்றிய இந்து மதத்தின் மீது கொண்டுள்ள மேலாணையை உறுதிப்படுத்தும் சம்பவமாகவே நோக்கப்பட்டதை இதனுடன் புத்தரின் விஜயங்களும், குறிப்பாக நாகதீபத்தின் மீது மேற்கொண்ட விஜயமும் எடுத்துக்காட்டுகின்றன. இதனால் சங்க காலத் தமிழகத்தைப்போல் இப்பகுதியிலும் பௌத்தத்தின் செல்வாக்கு அங்கும் இங்கும் காணப்பட்டதே ஒழிய ஒரு வலுவுள்ள சக்தியாக நிறுவனமயமாக்கப்பட்ட சக்தியாக இது விளங்கவில்லை. இதனால் நாட்டின் பிற பகுதிகளில் இது பெற்ற செல்வாக்கை வடபகுதியில் பெற முடியவில்லை எனலாம்.

அரசியல் ரீதியில் அநுராதபுர அரசின் மேலாணை சிற்றரசுகள் மீது திணிக்கப்பட்ட செய்தியும் பாளி நூல்களில் உளது.[48] இது ஒரு கதை மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதாவது தேவநம்பிய தீசனின் தம்பியாகிய மகாநாக என்பவன் தான் அடுத்து அரசனாக வர வேண்டியவன். இவனிடமிருந்து அரசாட்சியைப் பறிக்க விரும்பிய தேவநம்பிய தீசனின் மனைவி ஒருகூடை மாம்பழத்தில் நஞ்சு கலந்த மாம்பழத்தையும் சேர்த்து அனுப்ப மகாநாகவுடன் இருந்த இளவரசன் அக்கூடையின் மேற்பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த நஞ்சூட்டப்பட்டிருந்த மாம்பழத்தைச் சாப்பிட்டதால் இறக்க, தனது பாதுகாப்புக்கு அஞ்சிய மகாநாக கதிர்காமச் சத்திரியரிடம் தஞ்சம் புக, பின்னர் இவன் வழிவந்த கோத்தபாயன் கதிர்காமச் சத்திரியர்களைக் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றியதாக இக்கதை உள்ளது. இதே போன்ற கதைகூட அநுராதபுர அரசர்கள் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் யாழ்ப்பாணப் பகுதியில் மேலாணை செலுத்தியதற்குக் காணப்படாததால் இப்பகுதியின் அரச உருவாக்கம் நாட்டின் பிறபகுதிகளில் காணப்பட்டஅரச உருவாக்க அம்சங்களைப் பெற்றுக் காணப்பட்டாலும் தனித்துவமான போக்கிலேயே சென்றது என்பது தெரிகிறது.

இத்தகைய அரச உருவாக்கத்தில் விவசாயக் கட்டமைப்பில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களின் வாழ்வின் நாட்டின் பிற பகுதிகளில் காணப்பட்டது போன்று உள்நாட்டு வாணிபம் மட்டுமன்றி வெளிநாட்டு வாணிபமும் முக்கிய பங்கினை வகித்தது எனலாம். தமிழகத்தின் நாகரிக வளர்ச்சிக்கு அப்பகுதியின் கரையோரப்பகுதியில் காணப்பட்ட துறைமுகங்களான முசுறி, தொண்டி, கொற்கை,

புகார், அரிக்கமேடு, காஞ்சி ஆகியன வழிவகுத்தது போன்று குடாநாட்டின் வளர்ச்சியில் யம்புகோளப்பட்டினம் மட்டுமின்றி ஊர்காவற்றுறை, நாவாந்துறை, வல்வெட்டித்துறை, நாகர்கோவில் போன்ற இடங்களில் காணப்பட்ட துறைமுகங்கள் ஊடாக ஏற்பட்ட வாணிப வளர்ச்சியும் காத்திரமான பங்கை வகித்ததைக் குடாநாட்டின் பலபகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட, தமிழக மட்பாண்டங்கள், ரவுரற்ரற மட்பாண்டங்கள், உரோம மட்பாண்டங்கள், நாணயங்கள் ஆகியன விளங்குகின்றன. தமிழகத்தோடு மட்டுமன்றி வடநாட்டோடும் , உரோம நாட்டோடும் இப்பகுதி நெருங்கிய தொடர்பை வைத்திருந்தது. இப்பகுதி ஊடாக முத்து, சங்கு, இரத்தினக் கற்கள் போன்றன ஏற்றுமதியாகின. வாணிபத் தொடர்பால் ஏற்பட்ட செழிப்பு மட்டுமன்றி, கருத்துப் பரிமாறலும் அநுராதபுரம் முக்கிய தலைநகராக எழுச்சி பெற வழிவகுத்தது போன்று குடாநாட்டிலும் கதிரைமலை என அழைக்கப்பட்ட கந்தரோடை முதன்மை அரசாக எழுச்சி பெற வழிபிறந்தது.

இக்கால நாகரிக வளர்ச்சியில் நாணயங்களும் பிரதானமாக நாணயப்பரி மாற்றமும் முக்கிய பங்கினை வகித்தன. இதனை உறுதிப்படுத்தும் வகையில் தமிழகத்தைப் போல் ஈழத்தின் பழைய நாணயங்களான முத்திரை நாணயங்கள் விளங்குகின்றன. இவற்றின் தோற்றம் கி.மு. 500 ஆம் ஆண்டாகும். இதனை விட இப்பகுதியில் தமிழக வம்சங்களின் குறிப்பாகப் பாண்டிய வம்சங்களின் நாணயங்களும் கிடைத்திருந்தாலும் இவற்றில் காணப்படும் குறியீடுகளோடு, தமிழகத்தில் இல்லாதவாறு இங்குகிடைத்த நாணயங்களில் காளையின் உருவமும் சித்திரிக்கப்பட்டுள்ளது. இக் காளை உருவம் பொறித்த நாணயங்களைப் படைப்பதற்கான அச்சுகள் அநுராதபுரத்தில் மட்டுமன்றித் தெற்கே அக்குறு கொடவில் (திஸ்ஸ மகாராம) கிடைத்திருப்பதால் இவை ஈழத்திற்கே உரியவை எனக் கொள்ளப்படுகிறது. இதே போன்று யாழ்ப்பாணக் குடா நாட்டில் காணப்படும் "இலட்சுமி" உருவம் பொறித்த நாணயங்களும் தனிரகமானவை. இத்தகைய நாணயங்கள் அநுராதபுரம், அக்குறுகொட ஆகிய இடங்களில் மட்டுமன்றிக் கிழக்கே நிந்தவூர் வரையிலும் கிடைத்துள்ளன. தமிழக அரச வம்சங்கள் இவற்றை வெளியிடாததால் ஈழத்துத் தமிழ் அரச வம்சங்களே, இந்துசமய நம்பிக்கையில் திளைத்த அரச வம்சங்களே இவற்றை வெளியிட்டிருக்கலாம் எனவும் கொள்ளப்படுகின்றது. இப்பின்னணியில்தான் அனுராதபுரத்தில் அரசாட்சி செய்த தமிழ் அரசர்கள் பற்றிய மறுபரிசீலனையை கலாநிதி பரமு புஸ்பரட்ணம் வெளியிட்ட இலங்கைத்தமிழரின் பண்டைய கால நாணயங்கள் என்ற நூலில் மேற்கொண்டுள்ளார்.[49] பொதுவாகவே ஈழத்து வரலாற்றாசிரியர்கள் வெளியிட்ட நூல்களில் மகாவம்சத்தரும் குறிப்புக்களை மையமாகக் கொண்டு இத்தமிழரசர்கள் தமிழ் நாட்டிலிருந்து படையெடுப்பாளர்களாக இங்குவந்து அநுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சிசெய்தனர் என்றே குறிப்பிடப்படுகின்றது. கிறீஸ்து பிறப்பதற்கும் வரலாற்றுக்காலத்தின் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலமாகிய

250 ஆண்டுகளில் அநுரதபுரத்தில் 20 அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் 10 பேர் தமிழர் மட்டுமன்றி இவ் 250 வருடங்களில் மூன்றிலொரு காலப்பகுதியில் (80 வருடங்கள்) தமிழர் ஆட்சிசெய்தனர். இவர்கள்தான் இந்நூல்களில் சேனன் குத்திகன்(22 ஆண்டுகள்).எல்லாளன் (44 ஆண்டுகள்), புலஹத்த, பாஹிய, பணயமாற, பிளையமாற, தாடிக(14 வருடம் 7 மாதங்கள்) வடுக(1 வருடமும் 2 மாதங்களும்), நீலிய(6 மாதங்கள்) ஆகும். இவர்கள் மகாவம்சம் குறிப்பிடுவது போல் தமிழகத்திலிருந்து வரவில்லை என்றும் ஈழத்திற்குரிய தமிழ் அரசர்கள் என்றும் மேற்கூறிய நாணய வகையோடு ஏதோ ஒருவகையில் தொடர்புடையவர்கள் எனவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.[50]

இச்சந்தர்ப்பத்தில் ஈழத்தில் கிறீஸ்து பிறப்பதற்கு முன்னுள்ள காலப்பகுதிக்குரிய பிராமிக் கல்வெட்டுகளில் குறிப்பாக வவுனியாவிலுள்ள பெரிய புளியங்குளம் (2 கல்வெட்டுகள்), அநுராதபுரம்(1 கல்வெட்டு), திருகோணமலை மாவட்டத்திலுள்ள சேருவாவில(1 கல்வெட்டு),அம்பாறை மாவட்டத்திலுள்ள குடுவில் (1 கல்வெட்டு) ஆகிய இடங்களில் வாணிப நடவடிக்கையில் ஈடுபட்டதமிழர் 'தமேட' என அழைக்கப்பட்டுள்ளனர். பாளி நூல்கள் தமிழரை "தமிள" எனக் குறிப்பதால் இத்தமிள என்ற பதந்தான் இப்பிராமிக் கல்வெட்டுகளில் 'தமேட' என இடம் பெற்றுள்ளது. என்பது பொதுவான கருத்தாகும்.[51] இதனால் இதனை இந்தியாவிலுள்ள ஒரு பகுதியில் வாழ்ந்த மக்களின் மொழியால் அப்பகுதி ஒரு தனிநாடாக அழைக்கப்பட்டது என்பதே மேற்கூறிய கருத்தாகும். எனினும் அண்மையில் ஈழத்தின் வடபகுதியில் மட்டுமன்றித் தென்பகுதியிலும்கிடைத்த இந்நாணயங்களுக்கும் பாளி நூல் குறிக்கும் 'தமிள', பிராமிக் கல்வெட்டுகள் குறிக்கும் 'தமேட' ஆகியவற்றுக்குமிடையே உள்ள தெடர்பும் ஆழமாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

பாவலரின் கட்டுரை வெளியான ஒரு நூற்றாண்டின் பின்னர் பண்டைய யாழ்ப்பாண வரலாற்றை வெறும் ஐதீகங்களில் மட்டும் எழுதும் நிலை இன்றில்லை. தொல்லியல் அகழ்வுகள், பிராமிக் கல்வெட்டுகள், நாணயங்கள் ஆகியன இதன் தொன்மையான கிறீஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்குரிய வரலாற்றை எமக்களித்தாலும் தமிழ் நூல்களில் பாளி நூல்களைப் போன்று வரலாற்றைக் கோவைப்படுத்தும் மரபு காணப்படாததால் தென்பகுதிச் சிங்கள மக்களின் தொடர்ச்சியான வரலாற்றைப் பல்வேறு சான்றுகள் மூலம் அறிவதற்குரிய வாய்ப்பு இருப்பதைப் போன்ற நிலை தற்போது காணப்படாவிட்டாலுங்கூட எதிர்காலத்தொல்லியல் ஆய்வுகள் பல புதிய தகவல்களைத்தருவதற்கான பழைமையும் பாரம்பரியமும் இப்பிரதேசத்திற்கு உண்டு என்பதை மட்டும் அறுதியிட்டுக் கூறலாம். பாவலரின் யாழ்ப்பாணவரலாற்றை ஆய்வதிலும் அவரின் சிந்தனையைக் கனவை நனவாக்கும் பணியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முனைப்புடன் செயற்படுகிறது என்பதை வெகுவிநயத்துடன் இச்சபையில்

கூறவிரும்புகிறேன். எல்லாம் வல்ல அப்பரம்பொருள் நமது பணிகளுக்குத் துணை நிற்குமாறு அதனையாசிப்போமாக.

இறுதியாகப் பாவலர் தொட்டுக்காட்டிய தமிழர் ஒரு தனியான தேசிய இனம் என்பது பற்றிக் கூறுவதும் இன்றைய சூழலில் பொருத்தமாகின்றது. இது பற்றிப் பேராசிரியர் வேலுப்பிள்ளையும் தமது விரிவுரையில் பிரஸ்தாபித்திருந்தார். பாவலரின் இக்கட்டுரை பிரசுரமாகமுன்னர் பிரித்தானிய தேசாதிபதியின் (நோத் பிரபு) காரியதரிசியாக இருந்த கிளைக்கோன் 1796 இல் கூறியது இதுதான்.[52]

> "இலங்கைத் தீவானது மிகப்பழைய காலந்தொட்டே
> இருவேறு தேசிய இனங்களால் வெவ்வேறு பகுதிகளில்
> உரிமை கொண்டாடப்பட்டுள்ளது. இத்தீவின் நடுப்பகுதியும்
> தென்பகுதியும் வளவை ஆற்றிலிருந்து சிலாபம்
> வரையிலான மேற்குப்பகுதியும் சிங்கள இனத்தவரால்
> ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இத்தீவின் வடக்குக்
> கிழக்கு நிலப் பகுதிகள் மலபார் ( தமிழ் ) மக்களின்
> ஆட்சிக்குட்பட்ட பகுதியாகும். இவ்விரு தேசிய இனங்களும்
> இவ்விரு பகுதியினரும் மதத்தாலும் மொழியாலும்
> வாழ்க்கைப் பண்பாட்டாலும் முற்றிலும்
> வேறுபட்டவர்களாகும்."

ஏழ் நாடாகிய ஈழத்தின் பண்டைய மொழிகளான தமிழும், எலுவும் ( தமிழின் கிளை மொழி) காணப்பட, பௌத்தத்தின் வருகையால் எலு மொழியைப் பேசிய தற்காலச் சிங்கள மக்களின் மூதாதையினர் பௌத்தத்தைக் கடைப்பிடிக்க இன மொழி ரீதியான தனித்துவம் காலகதியில் பூரணம் பெற்றது. கிளைக்கோன் சிந்தனையை மட்டுமன்றி ஈழத்து வரலாற்றையும் நன்கு ஊன்றி உணர்ந்ததாற் போலும் பாவலர் அவர்கள் தமிழரை அன்று ஒரு தனித்தேசிய இனத்திற்குரிய அடைமானம் உடையவர்களாகக் கண்டார். இத்தகைய பாவலரின் மாணவன் ஆகிய தமிழரின் தேசியத் தந்தை எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்கள் அரசியல் ரீதியான ஒரு கோட்பாட்டையும் நமக்குக் கையளித்துச் சென்றுள்ளார். பாவலரின் சிந்தனையை உள்வாங்கினாற் போலும் இத்தகைய கோட்பாடு தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் இளம் நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது. அதுதான் தமிழர் தனியான தேசிய இனம். இதற்கு ஒரு மரபு வழித்தாயகம் உண்டு மட்டுமல்ல தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமையும் உண்டு என்பதாகும். பாவலருக்கு நாம் செய்யும் கைமாறு அவரது மாணவனால் நமக்குக் கையளிக்கப்பட்ட மேற்கூறிய கோட்பாட்டை இறுகப்பற்றி நிற்பதாகும்.

1. Thuraiappahpillai.T.A., 'Jaffna past and present', Ceylon National Review, January, 1907, pp. 1-28.
2. வேலுப்பிள்ளை. ஆ. . பாவலர் துரையப்பாபிள்ளையின் யாழ்ப்பாணம் - அன்றும் இன்றும் - மீள்பார்வை பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை 6 (24. 6. 1986)
3. சிற்றம்பலம், சி.க. , ஈழத்து இந்து சமய வரலாறு கி.பி. 500 வரை பாகம் 1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (திருநெல்வேலி), 1986.
4. Rasanayagam,S., Ancient Jaffna (Madras), 1926.
5. அ. Gnanaprakasar, Swami., 'Dravidian element in Sinhalese', J.R.A.S(C.B) Vol. XXXIII, No. 89, Parts I, II and IV, 1937: pp.233 - 253
   ஆ. Gnanaprakasar, Swami., 'Tamils turn Sinhalese', Tamil Culture, Vol.I, No. 2 Feb.1952, pp. 132 - 142.
   இ. Gnanaprakasar, Swami, 'Ceylon Originally a land of Dravidians' Tamil culture, Vol. I, No. I, Feb. 1952,pp.263-279.
6. Mendis, G.C., 'The Vijaya legend', Jeyawickrama, M.A (ed) , Paranavitana Felicitation Volume (Colombo) , 1965, pp. 263-279.
7. Senaratne,S.P.F., Pre-Historic Archaeology of Ceylon, (Colombo) , 1969.
8. Deraniyagala.S.U., The Citadel ot Anuradhapura, 1969, Excavations in the Gedige Area, Ancient Ceylon, No. 2. 1972, pp. 48-162.
9. Begley.V., 'Proto - historical Material from Sri Lanka (Ceylon) and Indian contacts', Kennedy, K.A.R and Possehl, E.L (ed) Ecological Backgrounds of South Asian Pre - History (New Orleans) , 1973, pp. 191-196.
10. Begley.V., Excavations of Iron Age Burials at Pomparippu, 1970, Ancient Ceylon, No. 4, 1981; Sitrampalam.S.K. The Urn, Burial site of Pomparippu of Sri Lanka - A Study, Ancient Ceylon, No. 7, Vol.2, 1999, pp. 263-297.
11. Weisshaar.H.J., Roth H and Wijeyapala. W. (ed) , Ancient Ruhuna, Sri Lanka - German Archaeological Project in Southern Province, Vol.I, Verlag Philipp Von Zabern - Mainz Am

Rhein (2001); Bopearachchi Osmand and Wickremesinghe Rajah 'Rohuna - An Ancient Civilization Re - visited - Numismatic and Archaeological evidence on Inland and Maritime Trade (Nugegoda - Colombo) 1999.
12. Sitrampalam.S.K. The Megalithic Culture of Sri Lanka. Unpublished Ph.D., Thesis, University of Poona (Poona), 1980.
சிற்றம்பலம், சி.க. 'பண்டைய ஈழத்தில் தமிழர் - ஒரு பன்முகப் பார்வை'. பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை, 2000 (யாழ். பல்கலைக்கழக வெளியீடு)
13. Goonetilleka, Susantha - Sinhalisation - Migration or Cultural Colonisation, Lanka Guardian, Vol. 3, No. 1 May I, May 15, 1980, pp. 22-29 and 18-19.
14. Seneviratne, Sudharshan, 'Peripheral Regions and Marginal Communities towards an Alternative Explanation of Early Iron Age material and Social formations in Sri Lanka, Champaka Lakshmi, R and Gopal, S (ed), Tradition, Dissent and Ideology, Essays in honour of Romila Thapar (Oxford University Press), 1996, pp. 264-310.
15. Pieris,P.E., 1917 'Nagadipa and Buddhist Remains in Jaffna, Part I, J.R.A.S, Vol. XXVI, No. 70 pp. 11-67; Pieris.P.E., 1919, 'Nagadipa and Buddhist Remains in Jaffna J.R.A.S., Vol. XXVIII, No. 72, pp. 40-67.
16. சபாநாதன், குல., யாழ்ப்பாண வைபவமாலை (சுன்னாகம்), 1949, (கொழும்பு), 1953, ப.6.
17. Ceylon Daily News, Feb. 22, 1919.
18. Begley.V., 'Archaeological Exploration in Northern Ceylon', Expedition, Vol. 9, No. 4, pp. 21-29. 1967.
19. மு. கூ. க. , 1973.
20. Sitrampalam,S.K., மு. கூ. க. 1980.
21. புஸ்பரட்ணம். ப. , பூநகரி – தொல் பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம், 1993.
22. Sitrampalam, S.K. Ancient Jaffna - An Archaeological Perspective, Journal of South Asian Studies, Vol. 3, No. 1 & 2,pp, 1-15.
சிற்றம்பலம், சி.க. 'யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும்' செந்தழல், தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1982.
23. Ragupathy.P., Early Settlements in Jaffna - An Archaeological Survey (Madras) 1987.

24. மேற்படி. , பக். 200 - 203
25. Chanmugam,P.K and Jayawardena,F.L.W, 'Skeletal remains from Tirukketiswaram' Ceylon Journal of Science, Section (G), S (2), 1954, pp. 65-68.
26. Ragupathy,P. மு. கூ. நூல். , 1987.
27. மேற்படி
28. புஸ்பரட்ணம். ப. , மு. கூ. நூல், 1993.
29. கிருஷ்ணராசா. செ. , 'தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், பிறை நிலா வெளியீடு, (யாழ்ப்பாணம்) , 1998.
30. சிற்றம்பலம். சி. க. யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, (திருநெல்வேலி) , 1993.
31. சிற்றம்பலம். சி. க. (பதிப்பு) , யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (திருநெல்வேலி) , 1992.
32. திருநாவுக்கரசு. சு. த. , இலங்கையிற் தமிழ்ப் பண்பாடு (சென்னை) , 1978.
33. Paranavitana,S (ed). Inscriptions of Ceylon, Vol. I; Early Brahmi Inscriptions (Colombo), 1970., In. Nos. 1051-52.
34. Rasanayagam., மு. கூ. நூல் 1926., pp. 33-44.
35. அகநானூறு. செய். 88, 231, 307, குறுந்தொகை, செய். 189, 343, 360, நற்றிணை. செய். 366.
36. புஸ்பரட்ணம். ப. . 'தொல்லியல் நோக்கில் கந்தரோடையும் கதிரைமலையும்', நிறுவுநர் அம்பலவாணர் கந்தையா நினைவுப் பேருரை, யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், 2001.
37. Buhler, J.C., Indian Palaeography (Indian Antiquary, Vol. XXXIII), 1904; Fernando, P.E., 'The Beginnings of the Sinhala Script', Education in Ceylon - A Centenary Volume, Colombo, 1969, pp. 19-24.
38. புஸ்பரட்ணம். ப. , மு. கூ. நூல், 1993.
39. கிருஷ்ணராசா. செ. மு. கூ. நூல், 1998.
40. Wimalasena. N.A., 'A New Chronology for the letters appearing on the Pottery found near the place in the citadel of Anuradhapura, Paper submitted (in Sinhala) for the section E of the Sri Lanka Historical Association on the occasion of 50th Anniversary of Independence of Sri Lanka (Feb. 23 – 25, 1998) p.27.
41. Karunaratne, Saddhamangala, Epigraphia Zeylanica Vol. VII, Being lithic and other inscriptions of Ceylon (Colombo), 1984.

42. Weisshaar, H.J, Roth H and Wijeyapala W. (ed), மு. கூ. நூல்.
43. சிற்றம்பலம், மு. கூ. நூல், 1993.
44. Geiger (ed) Mahavamsa (Colombo), 1950, ch. XIX, vv. 53-55.
45. கிருஷ்ணராசா. செ. மு. கூ. நூல்.
46. சபாநாதன். குல (பதிப்பு), யாழ்ப்பாண வைபவமாலை 1953. ப. 6.
47. Geiger (ed) Mahavamsa. Ch. XIX, v.v. 23-27.
48. சிற்றம்பலம். சி. க. மு. கூ. நூல், 1993, பக். 66 - 67.
49. புஸ்பரட்ணம். பரமு., இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள் (பவானி பதிப்பகம்), புத்தூர், 2001.
50. சிற்றம்பலம். சி. க. ஈழத் தமிழர் வரலாறு கி.பி. 1000 வரை தொகுதி 1, 1994.
51. சிற்றம்பலம். சி. க. தமிழர் பற்றிக் கூறும் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய சில கருத்துக்கள், தமிழோசை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றச் சஞ்சிகை, 1988–89. ,பக்.29 – 37.
52. Silva. K.M.De., The Traditional homeland of the Tamils of Sri Lanka - A Historical Appraisal, (Colombo), 1987.